வானவில்

VAANAVIL

இதழ் 149 வைகாசி 2023

ISSUE 149 MAY 2023

# தேசியமா? சாதியமா?

இலங்கை தமிழ் மக்களின் வாழ்வில் புதியதொரு காலகட்டம் பிறந்துள்ளது போலத் தோன்றுகிறது.

இலங்கை 1948 பெப்ருவரி 4 ஆம் திகதி பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் தமது தேசிய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு காலத்துக்குக் காலம் பல முயற்சிகளை எடுத்து வந்துள்ளனர்.

தமிழ்த் தலைமைகள் தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முதலில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்தன. பின்னர் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தன. அதன் பின்னர் தனிநாடு கோரிக்கையை முன்வைத்தன. (இன்று இவைகள் எதையும் அடைய முடியாமல் போனது மட்டுமின்றி, கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் உதாசீனப்படுத்தி, இருந்ததையும் இழந்து நிற்கின்றனர்)

முதலில் 'அகிம்சை' வழியில் போராட்டங்களை முன்னெடுத்த தமிழ்த் தலைமைகள், தனிநாடு கோரிக்கையை முன்வைத்த பின்னர் அது வன்முறை வடிவத்தை எடுக்கத் தொடங்கியது. அதேநேரத்தில் தலைமையும் முதிய தலைமுறையினரின் கைகளில் இருந்து இளைஞர்களின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்தது.

இளைஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல இயக்கங்களை ஆரம்பித்து தமது சக்தியைச் சிதைத்தனர். இத்தகைய ஒரு நிலைமை இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. விடுதலைப் போரில் ஈடுபட்ட உலக மக்கள் முன்னரே கண்ட அனுபவம்தான். ஏனெனில் வர்க்கங்களாகவும் சாதிகளாகவும் பிளவுபட்டுள்ள ஒரு



சமூகத்தில் ஒவ்வொரு வர்க்கமும் சாதியும் தத்தமது நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக தனித்தனி அமைப்புகளை உருவாக்குவது இயல்புதான்.

அத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு பொது இலட்சியத்தை அடைவதை முன்வைத்து பல்வேறு அமைப்புகள் தமது கருத்து முரண்பாடுகளை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணியாக இணைந்து செயல்படுவதே சரியானதும் வெற்றிக்கு உத்தரவாதமானதுமாகும். இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய இளைஞர் இயக்கங்கள் எல்லாவற்றினதும் ஒரே குறிக்கோள் இலங்கைத் தமிழர்களுக்கு என தனிநாடு ஒன்றை அமைப்பதுதான் என்றபடியால் இங்கு கருத்து முரண்பாடு எதுவும் இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் உலக வரலாற்றில் இல்லாதபடி இலங்கையில் மட்டும் தமிழ் இயக்கங்கள் மத்தியில் சகோதரச் சண்டைகள் உருவாகி வகைதொகையில்லாமல் கொலைகள் நடந்தன. இயக்கங்களுக்குள்ளும் உட்படுகொலைகள் நிகழ்ந்தன. இந்தச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களை அழித்து தமிழ் மக்களின் ஏகோபித்த தலைமையாக, பாசிச இயக்கமாக தனக்குத்தானே முடிசூடிக்கொண்டது.

இருந்தும் புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டமும் இறுதியில் அழிவில் முடிவுற்று அந்த இயக்கமும் அழிந்து போனது. அதற்கான காரணங்கள் பல. ஆனால் சுருக்கமாகக் கூறினால் போராட்டத் தலைமை முதிய தலைமுறையிடமிருந்து இளைஞர்களின் கைகளுக்கு மாறினாலும், அவர்களது பாதை மாறவில்லை. அதாவது, அவர்களது முதலாளித்துவ வர்க்கத் தன்மை மாறவில்லை.

இந்த விடயம் குறித்து மேலும் விளக்கமாகச் சொல்வதானால், அகிம்சை வழிப் போராட்டத்தை நடத்திய முதலாளித்துவ தமிழ்த் தலைமைகள் பின்பற்றிய ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையே ஆயுதப் போராட்டம் நடத்திய தலைமைகளும் பின்பற்றின. அது மட்டுமின்றி, முன்னைய

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெற்று வருகின்றதா?

**2022** ஆண்டு மார்ச் மாதம் கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட அரகலயா போராட்டத்தின் பின்னர் இலங்கை அரசியலில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது பலரைப்போலவே எமக்கும் புரியாமல் இருக்கின்றது. Gota Go Home என ஆரம்பிக்கப்பட்ட அரகலயா போராட்டம், ஒட்டுமொத்த ராஜபக்ச குடும்பத்தை அதிகாரபீடங்களிலிருந்து அகற்றி, ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி, இறுதியில் அவரையே ஜனாதிபதியாக இருத்தியுள்ளது. இதுதான் அரகலயா போராட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் மற்றும் அவர்களுக்கு பின்னாலிருந்த சக்திகளின் அரசியல் நிரலாகக்கூட இருந்திருக்கலாம்.

51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக்கடன், அந்நியச்செலவாணி ஏறத்தாள முற்றாகத் தீர்ந்துபோன நிலைமை, எரிபொருள் தட்டுப்பாடு, பணவீக்கம் 73 வீதம் என ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கை சிக்கலான நிலைமையில் இருந்தது. நாடு வங்குரோத்து அடைந்துள்ளதாக இலங்கை பகிரங்கமாக உலகிற்கு அறிவித்தது. சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) மாத்திரமே இலங்கையை மீட்டெடுக்க முடியுமென்று இலங்கை அரசு அவர்களின் காலடியில் வீழ்ந்து கிடந்தது.

2022 ஆம் ஆண்டின் முற்பகுதிவரை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அரசு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முற்றாக நிராகரித்தே வந்துள்ளார்கள். ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக கோட்டாபய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. பின்னர் ரணில் தலைமையிலான புதிய அரசு அந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தது.

கடந்த மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 16 நிபந்தனைகளின் கீழ் 2.9 பில்லியன் டொலர் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவிப்பு வெளியானது. இக்கடன் தொகை 48 மாதங்களில் பகுதி பகுதியாக இலங்கைக்கு வழங்கப்படுமெனவும் இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பு வெளியானபோது கொழுப்பு பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:

"சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்ற நாடுகளில் 50 சதவீதமான நாடுகளில்தான் நிதியத்தின் பொருளாதார கொள்கைகள் வெற்றியளித்துள்ளன. அடுத்த 50 சதவீதமான நாடுகளில் இந்த கொள்கைகள் மிகப்பெரிய தோல்வியைத்தான் சந்தித்துள்ளன. ஏற்கனவே 16 தடவைகள் நிதியத்திடம் கடன் உதவி பெற்ற இலங்கை உட்பட பல நாடுகள் தோல்வியைத்தான் சந்தித்துள்ளன. நிதியத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்திய நாடுகளில் 50 சதவீதமான நாடுகளில் அது ஓரளவிற்கு வெற்றியளித்துள்ளதே ஒழிய, முற்று முழுதாக 100 சதவீதமோ அல்லது 90 சதவீதமோ வெற்றியளித்ததாக தெரியவில்லை. சில நாடுகளில் அந்த கொள்கைகள் மக்கள் மத்தியில் சமூக ரீதியிலான எதிர்பாராத பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இதனுடைய வெற்றி தோல்வி என்பது எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசாங்கம் எப்படி கொண்டு நடத்தப் போகின்றது?, அதனூடாக நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையுமா?, அந்த வளர்ச்சியின் நன்மைகள் மக்களை சென்றடையுமா? என்பதை அடிப்படையாக வைத்துத்தான் பார்க்கப்பட வேண்டும்"

பணவீக்கம் தற்போது 33.6 வீதமாக உள்ளதாகவும், நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று தற்போது பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளதாவும், நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசு கூறி வருகின்றது.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார ஆய்வு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான திணைக்களத்தின் ஆலோசகர் கணேசன் விக்கினராஜா அண்மையில், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளின் உதவிகள் மூலம் இலங்கை அதன் முடங்கியிருந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை நாணயத்தின் பெறுமதியும் அமெரிக்க டொலருக்கு எதிராக அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஆனால் இதற்கு காரணம் ரணில் தலைமையிலான அரசாங்கமோ, வெளிநாட்டுக் கடன் உதவிகளோ அல்லது சர்வதேச நாணய நிதியம் இலங்கை மீது திணித்துள்ள பொருளாதாரக் கொள்கைகளோ என்று கூறிவிட முடியாது.

தற்போதைய அரசைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களில் ரணில் விக்கிரமசிங்கவுடன் வேறு சிலருமே புதியவர்கள், ஏனையவர்கள் கோட்டாபய அரசில் அங்கம் வகித்தவர்கள். மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் முழு ஆதரவிலேயே தற்போதைய ஆட்சி நடைபெறுகின்றது. ஆகவே ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமை சற்று மாறுதலடைந்து வருவதை ரணில் அரசியலில் தனக்கு சாதகமாக பயன்படுத்தக் கூடாது. நாங்கள் இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். 1978 இல் ஜே.ஆர் அறிமுகப்படுத்திய தாராளமயப் பொருளாதாரத்தில் நாங்கள் தொங்கிக் கொண்டு இருந்தால் நெருக்கடிகளும் எங்களைத் துரத்திய வண்ணமே இருக்கும். இலங்கையிலுள்ள சகல மக்களின் அடிப்படைத் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்வதென்று ஆராய்ந்து பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டும். இலங்கைக்குத் தேவையானது புதிய பொருளாதார முறைமையே.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*



## *புரட்சிகர மே தின வாழ்த்துக்கள்!*

சர்வதேச ஐக்கியம் மற்றும் தோழமையுணர்வு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடி வரும், உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தை மே தினத்தன்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

**—ஆசிரியர் குழு**

# செயற்கை நுண்ணறிவும் உழைக்கும் வர்க்கமும்

மனிதகுல வரலாற்றில், மனிதர்கள் தாங்கள் செலவிடும் உழைப்பு சக்தியைக் குறைப்பதற்கான கண்டுபிடிப்புகளை எல்லா காலங்களிலும் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளனர். ஆதி மனிதர்கள் விலங்குகளை வேட்டை ஆடுவதற்காகத் துவக்கத்தில் கூர்மையான கற்களைப் பயன்படுத்தினார்கள். பின்னர் கற்களை கூர்மைப்படுத்திப் பயன்படுத்தினார்கள். கிடைத்த கூர்மையான கல்லை வேட்டைக்குப் பயன்படுத்துவது என்பது ஒரு சிந்தனை ரீதியான வளர்ச்சி எனில், கிடைத்த அனுபவத்திலிருந்து சாதாரண கல்லை கூர்மைப்படுத்தலாம் என்று எண்ணுவதும், அதை கூர்மைப்படுத்த முயற்சிப்பதும் அடுத்தடுத்த வளர்ச்சிப்போக்காகும். இதன் முன்னேறிய கண்டுபிடிப்புக்களையே தொழில்நுட்பம் என்கிறோம். அடிப்படையில், எல்லா கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்ப வளர்ச்சிகளும், மனித தேவைகளுக்கான பொருள் உற்பத்தியில் மனித உழைப்பைக் குறைப்பதற்கானதாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அந்த கண்டுபிடிப்புகளின் வாயிலாக, பொருளுற்பத்திக்கு செலுத்தப்படவேண்டிய உழைப்புச் சக்தி குறைந்தபோதும், ஆளும் வர்க்கம் உழைக்கும் மக்களின் உழைப்பு நேரத்தை நீட்டித்துள்ளனரே தவிர குறைத்திடவில்லை. இக்கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, தற்போதைய தகவல் தொழில்நுட்ப காலத்தில் செயற்கை நுண்ணறிவு எனும் தொழில்நுட்ப வளர்ச்சி உழைக்கும் மக்கள் மீது செலுத்தியுள்ள தாக்கத்தை மார்க்சிய அடிப்படையில் விளக்கிடும் சிறு முயற்சியே இக்கட்டுரையாகும்.



**செயற்கை நுண்ணறிவு**

“நீங்கள் சொல்வதை கேட்பதற்காகவே நான் எப்போதும் உங்களுக்காக இங்கே இருக்கிறேன். உங்கள் மனத்தில் உள்ளதை அறிய விரும்புகிறேன்” இது ஏதோ காதல் வசனம் என்று நினைத்திட வேண்டாம். எனது தொலைக்காட்சியில் யூ டியூபில் (You Tube) ஒரு பாடலை தேடுவதற்காக கூகுள் குரல்வழி தேடல் (Google Voice Search) மூலம் முயன்றேன். எனது குரல் அதற்குப் பிடிபடவில்லை. என்னை மீண்டும் பேசச் சொல்வதற்காக அது எனக்கு அளித்த பதில்தான் நான் துவக்கத்தில் கூறிய வரிகள். இது செயற்கை நுண்ணறிவின் சிறு உதாரணம்தான்.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) AI என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு என்பது முக்கிய மைல்கல்லாகும். இதன் அடுத்தடுத்த வளர்ச்சியாக Chat Generative Pre-training Transformer (ChatGPT) என முன்னேறிச் செல்கிறது. மனித மனத்தைப் போலவே புத்திசாலித்தனமாக சிந்திக்க வைக்கும் தொழில்நுட்ப முறை என்றும் இதை விளக்கலாம்.

**ச.லெனின்**

பொதுவாக, இயந்திரங்கள் நாம் கொடுக்கும் தகவல்களைகொண்டு ஒரு குறிப்பிட்ட செயலை ஒரே மாதிரி செய்யக்கூடியவையாகும். மனிதர்கள்தான் தகவல்கள், அனுபவங்கள், முந்தைய பதிவுகள் என்பதை மனத்தில் கொண்டு சூழலுக்கு ஏற்றவகையில் தங்களின் நுண்ணறிவைப் பயன்படுத்திச் செயலாற்றுவர். மனிதனைப் போலவே அறிவாற்றலுடன் சிந்திக்கும் வகையில், ஒரு மென்பொருளைக் கொண்டு இயந்திரத்தை செயலாற்ற வைப்பதன் வடிவமே, இந்த செயற்கை நுண்ணறிவு எனலாம். செயற்கை நுண்ணறிவு, மனிதர்களின் நுண்ணறிவையும், அவர்களின் புலன்களையும் பின்பற்றுவதோடு, காட்சியை உணர்வது, பேச்சை அங்கீகரிப்பது, முகத்தை அங்கீகரிப்பது, பரிசீலிப்பது, முடிவெடுப்பது என அதன் உள்ளடக்கம் நீள்கிறது.

செயற்கை நுண்ணறிவு என்பதை நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் டிவி என நம்மை சுற்றியே பல இடங்களில் உள்ளது. நாம் பேசும் வார்த்தைகளைக் கொண்டு முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் அதுகுறித்த விளம்பரங்கள் வருவதும், ஜிபிஎஸ் மூலம் நாம் எங்கிருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதும், நாம் செல்ல வேண்டிய வழியை அறிவதும், தட்டச்சு செய்யாமல் நாம் பேசுவதை அப்படியே எழுத்தாக மாற்றுவதும் (Voice Typing) அங்கீகரிப்பதும், செயற்கை நுண்ணறிவின் எளிய வடிவங்களே.

மருத்துவம், வங்கி, விவசாயம், என பல்வேறு துறைகளில் மிகப்பெரிய அளவில் செயற்கை நுண்ணறிவு செல்வாக்கு செலுத்த துவங்கிவிட்டது. கடந்த ஜனவரி மாதம் இறுதியில் அமெரிக்காவின் கொலம்பியா மாகாணத்தில் செயற்கை நுண்ணறிவின் முன்னேறிய வடிவமாக உள்ள ChatGPT ஐ கொண்டு தீர்ப்பின் ஆணையை தயாரித்துள்ளனர். நீதிபதிகள் இருந்த போதிலும், தீர்ப்பின் ஆணையை ChatGPT துணையுடன் தயாரித்துள்ளனர். ஆணையைத் தயாரிப்பதற்கான நேரம் வெகுவாக குறைந்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். நோய்களைக் கண்டறிவதைச் செயற்கை நுண்ணறிவு எளிமைப்படுத்தியுள்ளதாகவும், நோய்களுக்கான தீர்வுகளையும் அவை வழங்குவதாகவும், மேற்பார்வையின்றி நோயாளிக்கு அறுவை சிகிச்சை

மேற்கொள்ளக்கூட இதைப் பயன்படுத்தமுடியும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மனித உழைப்பு அடைந்துள்ள வளர்ச்சி**

“நவீன தொழில்துறை உலகச் சந்தையை நிறுவியுள்ளது. வர்த்தகத்துக்கும், கப்பல் போக்குவரத்துக்கும், தரைவழி தகவல் தொடர்புக்கும் அளப்பெரும் வளர்ச்சியை அளித்தது. இந்த வளர்ச்சி தன் பங்குக்குத் தொழில் துறையின் விரிவாக்கத்திற்கு வித்திட்டது. தொழில்துறை, வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து ஆகியவை எந்த அளவுக்கு விரிவடைந்ததோ, அதே அளவுக்கு முதலாளித்துவ வர்க்கமும் வளர்ச்சியடைந்தது.

இவ்வாறு, நவீன முதலாளித்துவ வர்க்கம் என்பதே நீண்டதொரு வளர்ச்சிப் போக்கின் உடன்விளைவு – உற்பத்தி முறைகளிலும் பரிவர்த்தனை முறைகளிலும் தொடர்ச்சியாக நிகழ்ந்த புரட்சிகளின் உடன்விளைவு” என்று கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

தொழில்நுட்ப வளர்ச்சிகளும் அதுசார்ந்த உற்பத்தி உறவுகளில் ஏற்படுகிற மாற்றங்களும் சமூகத்தை அடுத்தடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்கின்றன. குறிப்பிட்ட சமூக நிலையின் வளர்ச்சி என்பது பொருளாயத உற்பத்தியை உயர்த்துவதற்கான செயல்பாட்டுடன் தொடர்புடையதாகும். எல்லா அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியும் அதனுடன் இணைந்துள்ளன. “மனித உழைப்பு அடைந்துள்ள வளர்ச்சி நிலைக்கான அளவுகோலை உழைப்புச் சாதனங்கள் வழங்குகின்றன.” என்கிறார் மார்க்ஸ்.

“பொருளாதாரமும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாகும். பொருளாதாரம் வளரும்போது அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் அது வளர்ச்சியை ஊக்குவிக்கும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் இந்த வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்” என்று ஜே.டி.பெர்னால் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில்தான், நவீனத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

“தொழில்நுட்பவியலும் அமைப்பு வடிவங்களும் வானத்திலிருந்து குதிக்கவில்லை. சமூக உறவுகளிலிருந்தும், அன்றாட வாழ்க்கை அல்லது உழைப்பு நிகழ்முறையின் நடைமுறைத் தேவைகளின் எதிர்வினையாகவும், அவை உருவாகின்றன” என்ற டேவிட் ஹோர்வியின் வார்த்தைகள் மேலும் இதை அர்த்தப்படுத்துகிறது.

**தொழில்நுட்ப வளர்ச்சியும் முதலாளித்துவ கணக்கும்**


2030 இற்குள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சந்தை சுமார் 121.5 பில்லியன் டொலர் வரை விரிவடையக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவ்வளவிற்கு விரிவடைய உள்ள சந்தையில் தொழிலாளரைச் சுரண்டாமல் இலாபம் இருக்குமா? அதை செய்யாமல் முதலாளித்துவத்தால் வாழ முடியுமா? “தனது சுற்றோட்ட விதிகளுடன் மேலும் ஒத்திசைவாக உள்ள ஒரு தொழில்நுட்பவியல் அடிப்படையை முதலாளித்துவம் கண்டு பிடித்தது.” அப்படியான அடிப்படையில் தற்போதைய கண்டுபிடிப்பே செயற்கை நுண்ணறிவுமாகும்.

புதிய தொழில்நுட்பங்கள் மூலதனத்திற்குக் கூடுதலான உழைப்பு சக்தியை பெற்று தருகிறது. குறைந்த உழைப்பு நேரத்தில் கூடுதல் உற்பத்தி, அது குறைந்த மனித சக்தியின் (குறைவான தொழிலாளர்கள்) மூலம் கூடுதல் உற்பத்தி என்பதாகவும் வடிவம் எடுக்கிறது. வேலை இழப்பு அதன் ஒரு பகுதியாக அமைகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி வேலையை எளிதாக்கும்போது, குறைந்த உழைப்பு சக்திதானே செலவாகும்? எனவே, கூடுதல் நேரம் உழைக்கும்படி தொழிலாளர்களை அது நிர்ப்பந்திக்கும். அவசிய உழைப்பு நேரம் என்பது தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உட்பட்டதுதான் என்கிறபோதும், கூடுதல் நேர உழைப்பு என்பது உபரி உழைப்பாகவும், அதன் மூலமாக கூடுதல் உபரி மதிப்பாகவும் முதலாளிக்கு லாபத்தைக் கூடுதலாக்குகிறது. “எந்திரங்களின் பயன்பாடும் உழைப்புப் பிரிவினையும் எந்த அளவுக்கு அதிகரிக்கின்றனவோ, அந்த அளவுக்கு வேலைப் பளுவும் அதிகரிக்கிறது. வேலை நேரத்தை நீட்டிப்பதன் மூலமோ, குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்படும் வேலையை கூடுதலாக்குவதன் மூலமோ, அல்லது யந்திரங்களின் வேகத்தை அதிகரிப்பதன் மூலமோ இன்னபிற வழிகளிலோ இது நடந்தேறுகிறது.” (கம்யூனிஸ்ட் அறிக்கை)

இயந்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை தொழிலாளர்களை மூலதனத்தின் விருப்பம்போல் ஆடவேண்டிய கட்டாயத்தை அதிகரித்துள்ளது. இயந்திரங்களும் தொழில்நுட்பமும் வளர்ச்சிபெறாத காலம் வரை அனைத்து பொருளுற்பத்தி சாதனங்கள் மீதும் தொழிலாளர்கள்தான் ஆளுகை செலுத்தினர். இயந்திரங்களும் நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சியும் தற்போது தொழிலாளர்களை ஆளுகை செலுத்துகிறது. கைவினை தொழில் அல்லது ஆலைகளுக்குள் இல்லாத பணிச்சூழல் இருந்தவரை உழைப்பவர் தனக்கு ஏற்ற கால வரையறைக்கு ஏற்றபடி தனது பொருளுற்பத்தி சாதனங்களை நிறுத்தி இளைப்பாறலாம். ஆனால், தொழிற்சாலைகளில், பொருத்தப்பட்ட இயந்திரங்கள் இயங்கும் வேகத்திற்குத் தொழிலாளி தன்னை இணைத்துக்கொண்டு இயங்கவேண்டிய கட்டாயம் உருவானது. முதலாளித்துவ சமூகத்தில் “அவர் (தொழிலாளி) எந்திரத்தில் பொருத்தப்பட்ட ஒரு துணையுறுப்பாய் ஆகிவிடுகிறார்.” (கம்யூனிஸ்ட் அறிக்கை). மேலும் “தொழிலாளர் அவரது உற்பத்திப் பொருளின் சேவகராக ஆகிறார்” “உழைப்பின் உற்பத்திப் பொருளுடன் தொழிலாளருக்கு உள்ள உறவு ஒரு அந்நிய புறநிலைப் பொருளாக அவர்மீது அதிகாரத்தை செலுத்துகிறது” என்கிறார் மார்க்ஸ். (அந்நியமாக்கப்பட்ட உழைப்பு)

“இயந்திரசாதனத் தொழில்நுட்பத்தின் அறிமுகத்திற்கு பிறகு தொழிலாளர்களின் வேகமும் தொடர்ச்சியும் இயந்திர அமைப்பின் உள்ளார்ந்த தன்மையில் தீர்மானிக்கப்படுகின்றன.”

ஆதிகால மனிதனை உழைப்புதான் இன்றைய முன்னேறிய நிலைக்கு எடுத்துவந்துள்ளது. முன்னர் உழைப்பே அவர்களது பலமாகவும் அடுத்தடுத்த வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைந்தது. வர்க்கங்களும் அதன் விளைவான சுரண்டலும் உருவான பிறகு, உழைப்பு என்பதன் பொருளும் மாற்றத்திற்கு ஆளாகியுள்ளது.




சுரண்டலின் அளவு மேலும் மேலும் உச்சத்தைத் தொட்டுள்ள முதலாளித்துவ சமூகம், உழைப்பை விற்கும் நிலைக்கு மனிதர்களை தள்ளுகிறது. உழைப்பை அவரிடமிருந்து பிரித்து அவருக்குச் சொந்தமானதாக இல்லாமல் செய்கிறது. “அது உழைப்பை துன்பமளிப்பதாக, பலத்தைப் பலவீனமானதாக, வளமையை மலடாக” மாற்றுகிறது.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியான செயற்கை நுண்ணறிவு தொழிலாளர்கள் மீது கூடுதலான கண்காணிப்பைத் திணித்துள்ளது. இது மனிதர்களின் உழைப்பை நிர்வாகம் செய்வதோடு, அதை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுகிறது. எந்த கணினியில் யார் பணியாற்றுகிறார்கள் என்ன பணி நடந்துள்ளது, எத்தனை மணிநேரம் கணினி செயல்பாட்டில் இருந்துள்ளது, அதில் என்ன உள்ளடக்கம் உள்ளது என்பது உள்ளிட்டு எல்லாமும் கண்காணிப்பிற்கு உட்பட்டதாக மாற்றம் பெற்றுள்ளது. “வேலையில் அவர் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதில்லை. மாறாகத் தன்னையே மறுக்கிறார். மனநிறைவு அடைவதில்லை, மாறாக மகிழ்ச்சி இழக்கிறார். தனது உடல் மற்றும் மன ஆற்றலைச் சுதந்திரமாக வளர்த்துக்கொள்வதில்லை, மாறாக அவரது உடலைச் சிதைத்துக் கொள்கிறார் மனதை அழித்துக் கொள்கிறார். தொழிலாளர் தாம் தனது வேலைக்கு வெளியே இருப்பதாக உணர்கிறார். அவரது வேலை அவருக்கு வெளியே இருப்பதாக உணர்கிறார். அவரது உழைப்பு தன்னிச்சையானதாக இருப்பதில்லை, மாறாக வலுக்கட்டாயமானதாக இருக்கிறது. அது நிர்ப்பந்திக்கப்பட்ட உழைப்பாக இருக்கிறது.” (அந்நியமாக்கப்பட்ட உழைப்பு)

கிக் பொருளாதாரம் (Gig Economy) வளர்ந்து தொழிலாளர்களை வீதிகளின் எல்லா முனைகளுக்கும் சுழற்றி அடிக்கிறது. ஜிபிஎஸ் மூலம் யார் எங்கு உள்ளார்கள் என்பதை கண்காணிக்கிறது. குறிப்பிட்ட நேரத்திற்குள் டெலிவரி செய்ய வேண்டும், அடுத்தடுத்த டெலிவரிகளை இடைவெளியில்லாமல் செல்போனில் உள்ள மென்பொருளின் ஆணைக்கிணங்க ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். பத்து நிமிடத்தில் உங்கள் இல்லம் தேடி பொருட்கள் வந்து சேரும் என்கிற விளம்பரத்தைக் குறிப்பிட்ட நிறுவனம் கொடுக்கும்போது மற்றொரு நிறுவனம் ஒன்பது நிமிடத்தில் டெலிவரி என்று விளம்பரம் கொடுக்கிறது. இந்த விளம்பரங்கள் மூலம் லாபம் ஈட்டப்போவது என்னவோ கார்ப்பரேட் நிறுவனங்கள்தான். ஆனால், அந்த மென்பொருளின் ஆணைக்கிணங்க உயிரைப் பணயம் வைத்து வியர்வை சிந்த ஓடுவது ஒரு ஏழை தொழிலாளிதான்.

“உழைப்பு பணக்காரர்களுக்கு அருமையான பொருட்களை உற்பத்தி செய்து தருகிறது என்பது உண்மை – ஆனால், தொழிலாளருக்கு அது ஏழ்மை நிலையையே உற்பத்தி செய்கிறது.” (மார்க்ஸ் – மார்க்சின் மூலதனத்திற்கு ஒரு வழிகாட்டி, டேவிட் ஹார்வி)

**புதிய உற்பத்தி நிகழ்முறை**

முதலாளித்துவ சமூகத்தில் புதிய கண்டுபிடிப்புகளும் நவீன தொழில்நுட்பங்களும் உழைப்பு சக்தியின் தேவையைக் குறைக்கும். ஆனால், அது லாபத்திற்கானதாக மட்டும் இருக்கும்போது ஆட்குறைப்பு அதன் ஒரு பகுதியாக ஆகிவிடுகிறது. இச்சூழலில் பொதுவாகத் தொழிலாளர்களின் போராட்டம் இயந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் எதிர்த்த போராட்டமாகக் குறுகிவிடுகிறது. அது முதலாளித்துவ அமைப்பு முறையை எதிர்த்த போராட்டமாக மாற்றப்பட வேண்டும்.

“இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான வரம்பு, இயந்திரத்தின் மதிப்புக்கும், அதனால் நீக்கப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது.” உழைப்பு சக்திக்கு வழங்கப்படும் ஊதியத்தைவிட இயந்திரங்களுக்கான செலவு குறைவாக இருக்கும்போது அங்கு இயந்திரமயமாக்கல், தொழில்நுட்ப பயன்பாடு விரைவாகவும் கூடுதலாகவும் நிகழ்கிறது. மேலும், சந்தையில் நிலவும் போட்டி, வலுக்கட்டாயமான விதிகள் இயந்திர (நவீன தொழில்நுட்ப) பயன்பாட்டைக் கட்டாயமாக்குகிறது. அவ்வாறு இயந்திர பயன்பாட்டை அமலாக்க முடியாத முதலாளிகள் தொழிலை விட்டே விரட்டப்படும் நிலைதான் உருவாகும். எனவே, சந்தையில் தனது இருப்பை தக்கவைத்துக்கொள்ளவும், தனது உற்பத்தியை பெருக்கவும், இலாபத்தைக் கூட்டிக்கொள்ளவும், முதலாளி இயந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் உட்கிரகித்துக்கொள்கிறார்.

“உழைப்பு நேரத்தைக் குறைப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த சாதனமாக இருக்க வேண்டிய இயந்திர சாதனம் (தொழில்நுட்பம்) எதிர்மறை இயக்கவியலை எதிர்கொள்கிறது.” உழைப்பை மேலும் வேகமாக்கி அவர்களை ஒட்ட உறிஞ்சுகிறது. புதிய தொழில்நுட்பங்களை உட்கொள்ளுவதன் மூலம் உழைப்பு நிகழ்முறையின் வேகத்தையும் மும்முரத்தையும் முதலாளித்துவம் மாற்றி அமைக்கிறது. இது மனிதனை “சுயேச்சையற்றவனாகவும் தனித்தன்மை இல்லாதவனாகவும்” மாற்றுகிறது.

அவர்கள் முதலாளித்துவத்தின் புதிய உழைப்பு நிகழ்முறைக்கு ஏற்றபடி ஓடவைக்கப்படுகின்றனர்.

ஆற்றல்மிக்க செயற்கை நுண்ணறிவைப் படைத்ததும் மனிதன்தான். அந்த மனிதனையே, நீ ஆற்றல் அற்றவன் உனது ஆற்றலைவிட செயற்கை நுண்ணறிவைக் கொண்டு நான் செயலாற்றிக்கொள்வேன் என்று குறிப்பிட்ட வேலைகளிலிருந்து தொழிலாளர்களை விரட்டுகிறது. முதலாளித்துவ சமூகத்தில் "தொழிலாளர் உற்பத்தி செய்வது அதிகரிக்க அதிகரிக்க, அவர் நுகர்வது குறைகிறது. அவர் உற்பத்தி செய்வதன் மதிப்பு அதிகரிக்க அதிகரிக்க, அவர் மதிப்புக் குறைந்தவராக, தகுதியற்றவராக ஆவது அதிகரிக்கிறது. அவரது உற்பத்திப்பொருள் உருப்பெற உருப்பெற, அவர் உருவழிப்பது அதிகரிக்கிறது. அவரது உற்பத்திப் பொருள் பண்படப் பண்பட, தொழிலாளர் பண்படையாதவராக ஆகிறார். உழைப்பு மிகவும் ஆற்றல்மிக்கதாக ஆக, ஆக உழைப்பவர் ஆற்றலற்றவராக ஆகிறார். உழைப்பு மேதமைமிக்கதாக ஆக, ஆக உழைப்பவர் மேதைமையற்றவராக ஆகிறார்." என்கிறார் மார்க்ஸ் (அந்நியமாக்கப்பட்ட உழைப்பு)

**தொழில்நுட்பங்களின் சமூக தாக்கம்**

இரவு பகல் பாராமல் உழைக்க நிர்ப்பந்திக்கப்படுவது, பத்து மணிநேரம் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேலாக வேலைநேரத்தை மாற்றுவது நிகழ்கிறது. ஊழியர்களுக்கு இணைய வசதியுடன் மடிக் கணினி வழங்கப்படுகிறது என்கிறபோது, எந்த நேரமும் உழைக்கத் தயாராகுங்கள் என்பதன் அர்த்தம் அதில் உள்ளது என்பதை உணரவேண்டும். குறைந்த கட்டணத்தில் இணையம், இலவச இணையம் என்பதெல்லாம் ஆன்லைன் வர்த்தகத்தின் சூட்சுமமும் நம்மைப் பின்தொடர்ந்து நிகழவுள்ள வலைப் பின்னலையும் உள்ளடக்கியதாகும். இணையமும் செயற்கை நுண்ணறிவும் ஏதோ பொருளாதார தளத்தில் மட்டும் தனது தாக்கத்தை செலுத்துவதில்லை. மாறாக, சமூகத்தின் அனைத்து தளத்திலும் அதன் தாக்கம் வெளிப்படுகிறது.

"மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள முனைப்பான உறவையும் அவன் வாழ்வதற்கு வகை செய்யும் நேரடியான பொருளுற்பத்தி நிகழ்முறையும் தொழில்நுட்பவியல் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் அது அவனது வாழ்க்கையின் சமூக உறவுகளும் அந்த உறவுகளிலிருந்து ஊற்றெடுக்கின்ற கருத்துருவங்களும் வடிவமைப்பையும் முறையையும் புலப்படச் செய்கிறது" என்கிற மார்க்சின் வரிகளைக் குறிப்பிடும் டேவிட் ஹார்வி, மேலும் அதை கீழ்காணும் வகையில் விளக்குகிறார். "இங்கே ஒரு வாக்கியத்தில் அடையாளங் காணக்கூடிய ஆறு கோட்பாட்டுக் கூறுகளை மார்க்ஸ் இணைக்கிறார். முதலில் தொழில்நுட்பவியல், பிறகு இயற்கையுடனான உறவு, பிறகு மெய்யான உற்பத்தி நிகழ்முறை, அடுத்து ஒரு நிழல் வடிவத்தின் அன்றாட வாழ்வின் உற்பத்தி மற்றும் மறுவுற்பத்தி, அதை தொடர்ந்து சமூக உறவுகளும் மன அளவிலான கருத்துருவாக்கங்களுமாகும். இந்த கூறுகள் எல்லாம் ஆடாமல் அசையாமல் அப்படியே இருப்பதில்லை. மனிதகுல வரலாற்றின் பரிணாம வளர்ச்சிக்கு வழிகாட்டும் உற்பத்தி நிகழ்முறையுடன் இணைக்கப்பட்டு இயங்கிக் கொண்டே இருக்கின்றன."

பித்துப்பிடித்தவர்கள் போல் குழந்தைகள் மாயையான எதிரிகளுடன் ஸ்மார்ட் போன், கணனிகளில் விளையாடுவதும், அதுவே சில குழந்தைகளை மனநல பாதிப்பிற்குத் தள்ளுவதும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்தானே? கூடுதல் வேலை நேரம் குடும்ப உறவுமுறையைப் பாதிக்கிறதல்லவா? மறுவுற்பத்தி என்பது நிபந்தனைக்கு உட்பட்டதாக மாறுவது அதன் தாக்கம்தானே? குறுகிய பார்வையை அதிகப்படுத்துவதோடு, மன அழுத்தம் வீட்டிலும் உடனிருப்பவர்களிடமும் வெடிக்கிறது. மனிதர்களின் சிந்தனை ஓட்டம் தனித்துவிடப்பட்டதாகவும், முடங்கிப்போனதாகவும் மாற்றப்படுகிறதே? முகநூல், டிவிட்டர் என உலகம் முழுமையும் கைக்குள் அடக்கமானதாக மாறியதாக கூறப்பட்டாலும், சமூகத்தில் நிகழும் அநீதிகளுக்கு எதிரான குரல்கூட, இரண்டு வரி முகநூல், டிவிட்டர் பதிவோடு கரைந்துவிடுகிறதே! முதலாளித்துவ சமூகத்தின் நிலைபோலவே தனிநபர்களை, தங்களையே முன்னிலைப் படுத்திக்கொள்ளும் வகையிலான ஸ்டேட்டஸ், டீ.பி, லைக், சொந்த அடையாளங்களை வெளிப்படுத்துதல் என்பவையே முன்னுரிமை பெறுகிறது. தங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டவை, விளம்பரம் எனக் கருத்துக்கள் திணிக்கப்படுவது என இது நீளும். இவற்றை எதிர்கொள்ளாமல் போனால் நாளைய உழைப்பு சக்தி கேள்விக்கு உள்ளாகிவிடும் என்கிற அச்சம் முதலாளித்துவத்துக்கு எழுந்துள்ளதன் விளைவாக சில நடவடிக்கைகளை அது எடுக்க முனைந்துள்ளது. ஆனபோதும் இயல்பிலேயே மனிதத்தன்மை அற்றதாக இருக்கும் முதலாளித்துவம் அதை எதிர்கொள்வதற்கான திராணி துளியும் இல்லாமல் திணறுகிறது.

**தொழிலாளி வர்க்கத்தின் கடமை**

அதேநேரம் செயற்கை நுண்ணறிவு ஆற்றல் மிக்க கண்டுபிடிப்பாக உள்ளது. மனித ஆற்றலை மிஞ்சிவிடக்கூடும் என்கின்ற அளவிற்கு விவாதிக்கப்படுகிறது. ஆனால் மனிதத் தலையீடு இல்லாமல் அதனால் ஒரு கட்டத்திற்குமேல் போக முடியாது என்பதே எதார்த்தம். உணர்வுப்பூர்வமான அணுகுமுறையோ, சற்று விலகி நின்று பார்க்கும் தனித்த பார்வையோ, புதியவகையான சிந்தனாபூர்வமான அணுகுமுறையோ இதில் சாத்தியமில்லை. அதேநேரம் மிகுந்த ஆற்றல் மிக்கதாகவும், நேரத்தை மிச்சமாக்குவதாகவும், நினைவுகளாக பதிவு செய்தவற்றை அலசி ஆராய்ந்து பல தரவுகளை அள்ளித் தரவும் இதனால் முடிகிறது. இந்த ஆற்றல்கள் மனித சமூகத்திற்குச் சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சியை அதில் உள்ள குறைபாடுகளை கொண்டு ஒதுக்கிவிட முடியாது. அதை மேம்படுத்துவது அதன் நோக்கத்தையும் பயன்பாட்டையும் மாற்றியமைக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட எந்த வளர்ச்சிப்போக்கையும் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. செயற்கை நுண்ணறிவால் மனித உழைப்பு குறையும்போது வேலை நீக்கம் செய்யும் முதலாளித்துவ நடைமுறைகளைக் கேள்வி எழுப்புவது, தொழிலாளர் நலனை பாதுகாக்க வலியுறுத்துவது, வேலை நேரத்தைக் குறைக்க வலியுறுத்துவது, குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலை உள்ளிட்டவற்றைப் பொருளாதார நடவடிக்கையாக அங்கீகரிப்பது, மனித சமூகத்தின்

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# இரண்டு புரட்சியாளர்களின் பிறந்த தினம்!



ஹோசிமின்

உலகப் புரட்சியாளர்கள் இரண்டு வகைப்பட்டவர்கள். ஒரு வகையினர் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள். மார்க்ஸ், லெனின், மாஓ, ஹோசிமின், ஃபிடல் காஸ்ட்ரோ, சே குவேரா, கிம் இல் சுங் போன்றவர்கள் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள்.

இன்னொரு வகைப் புரட்சியாளர்கள் தேசிய விடுதலைப் புரட்சியாளர்கள். அவர்களுக்கு உதாரணமாக, ஜோ மார்ட்டி, சன்யாட் சென், பட்ரிஸ் லுமும்பா, பூமதியன், சுகார்னோ, சிஹானூக், மல்கம் எக்ஸ் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இந்த இரண்டு வகையான புரட்சியாளர்களில் இருவரான ஹோசிமின், மல்கம் எக்ஸ் ஆகியோரின் பிறந்த தினம் மே 19 ஆகும். ஒருவர் வியட்நாமின் தேசபிதா ஹோசிமின் மற்றையவர் அமெரிக்க கறுப்பு இன மக்களின் விடுதலை வீரர் மல்கம் எக்ஸ்.

ஹோசிமின் 1890 இல் பிறந்தவர். மல்கம் எக்ஸ் ஹோசிமின் பிறந்ததிற்கு 35 வருடங்கள் கழித்து 1925 இல் அமெரிக்காவில் பிறந்தவர். இருவரும் ஒருபோதும் சந்தித்ததில்லை. ஆனால் இருவருடைய இலட்சியங்களும் ஒன்றாகவே இருந்தது. அதுதான் மக்கள் விடுதலை.

மல்கம் எக்ஸ் பிறப்பதற்கு ஒரு வருடம் முன்னதாக 1924 இல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் 5ஆவது மாநாடு சோவியத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்ற போது "தேசிய மற்றும் காலனித்துவப் பிரச்சினை" என்ற விடயம் குறித்து உரையாற்றிய ஹோசிமின், அமெரிக்காவில் நடைபெறும் கறுப்பு மக்களின் விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவம் குறித்து சுட்டிக்காட்டியிருக்கிறார். அப்பொழுது அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"மனித சமுதாயத்தில் கறுப்பு இன மக்களே மிகவும் ஒடுக்கப்படும், மிகவும் சுரண்டப்படும் மக்களாவர் என்பது எல்லோரும் நன்கறிந்த விடயம். முதலாளித்துவ உலகின் பரவலும், 'புதிய உலகின்' கண்டு பிடிப்பும் அடிமை முறையின் விளைவாக உருவானவையே. அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்ட பின்னரும் கறுப்பு இன மக்கள் மனோ ரீதியிலும், பொருளியல் ரீதியிலும் இன்றும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்".


ஹோசிமின் கூறியதற்கு 40 ஆண்டுகள் கழித்து 1964 இல் மல்கம் எக்ஸ் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"கறுப்பு மக்களின் போராட்டத்தை ஓர் இனப் போராட்டம் என்றோ, வெள்ளையர்களுக்கு எதிரான கறுப்பர்களின் போராட்டம் என்றோ அல்லது இது ஓர் அமெரிக்கப் பிரச்சினை என்றோ கூறுவது தவறானது. உண்மையில் இன்று நாம் உலக ரீதியாகக் காண்பது, ஒடுக்குவோருக்கும் சுரண்டுவோருக்கும் எதிரான ஒடுக்கப்படும் சுரண்டப்படும் மக்களின் போராட்டத்தையே".

1972 இல் ஒரு யப்பானிய நிருபருக்கு அளித்த பேட்டியில் மல்கம் எக்ஸ் பின்வருமாறு கூறினார்:

"வியட்நாம் போராட்டம் முழு மூன்றாம் உலக நாடுகளினதும் போராட்டமாகும். அது ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவ – காலனித்துவம் என்பனவற்றுக்கு எதிரான போராட்டமாகும்".

ஹோசிமின், மல்கம் எக்ஸ் என்ற இரண்டு புரட்சியாளர்களினதும் போராட்டங்கள் மக்கள் விடுதலையை நோக்கி இருந்த போதிலும், ஹோசிமின் நடத்திய போராட்டம் வெற்றிவாகை சூடி இன்று அவர் கனவு கண்டது போல வியட்நாம் தேசிய விடுதலையின் பின் ஒரு



மல்கம் எக்ஸ்

சோசலிச நாடாக உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கிறது. அதேநேரத்தில் மல்கம் எக்ஸ்சின் கனவு இன்னமும் நனவாகவில்லை. அதற்குப் பல காரணிகள் இருப்பினும் சில முக்கிய காரணிகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

முதலாவதாக, வியட்நாம் மக்களின் போராட்டம் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நடந்ததால், முதலில் பிரெஞ்சு பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்பை முறியடித்து தேசிய விடுதலையைப் பெற்றுக்கொண்டு, பின்னர் சோசலிச நிர்மாணத்தை மேற்கொள்ள முடிந்தது.

மல்கம் எக்ஸ் நடத்திய அமெரிக்க கறுப்பு மக்களின் போராட்டத்தைப் பொறுத்தவரை அது முழுக்க முழுக்க கறுப்பு இனத் தேசியவாதிகளால் நடத்தப்பட்ட ஒன்றாகும். அத்துடன் அங்கு கறுப்பு இன மக்கள் வேறு நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகளின் வழித்தோன்றல்களாகவும் சிறுபான்மையினராகவும் இருந்தனர். அத்துடன் உலகின் மிகுந்த வல்லமை வாய்ந்த ஓர் ஏகாதிபத்திய நாட்டில் உள்ளிருந்து நடத்தும் ஒரு போராட்டமாகவும் இருந்தது. எனவே அந்தச் சூழலில் விரைவான வெற்றி வாய்ப்புக்கு இடமிருக்காது.

இருப்பினும், என்றோ ஒருநாள் அமெரிக்க கறுப்பு இன மக்கள் தமது நீதியான போராட்டத்தில் வெற்றி பெறத்தான் போகிறார்கள். அந்தநாள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அழிவு நாளாகவும் இருக்கும். அப்பொழுது மல்கம் எக்ஸ், மார்டின் லூதர் கிங், றொபேர்ட் வில்லியம்ஸ் போன்ற அமெரிக்க கறுப்பு இனத் தலைவர்களின் கனவு நிச்சயம் நனவாகும்.

# ‘நிரம்ப அழகியர்’ கமில் சுவெலபில்!

அயல்நாட்டில் பிறந்து, தமிழுக்கும் திராவிட இயலுக்கும் தொண்டாற்றிய சிறந்த அறிஞர்களில் ஒருவர் பேராசிரியர் முனைவர் கமில் வாக்லேவ் சுவெலபில் (Kamil Vaclav Zvelebil).

ஐரோப்பிய நாடான செக் குடியரசின் தலைநகரான பிராக்கில், 1927 ஆம் ஆண்டு நவம்பர் 17 இல் பிறந்தார். கமில் சுவெலபில் தந்தை கமில் சுவெலபில், தாயார் மரியம்மா ஆவார்.

பிராக் (Prague) நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தில் (Charles University) 1946 முதல் 1952 வரை ஆறு ஆண்டுகள் பயின்றார். இந்திய இயல், ஆங்கில மொழி, இலக்கியம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டம் பெற்றார். மேலும், சமஸ்கிருதம், ஆங்கிலம், தத்துவம் ஆகியவற்றில் ஆய்வு செய்து, முனைவர் (Ph.D.) பட்டத்தை 1952 இல் தமது இருபத்தைந்தாவது வயதில் பெற்றார்.

தமிழகத்திற்கு வருகை புரிந்து தமிழ்மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் கமில் சுவெலபில் நன்கு கற்றார். தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், மு.வரதராசனார் முதலிய தமிழறிஞர்களிடம் பயின்றார். திராவிட மொழி அறிவியலை ஆய்ந்து, 1959 ஆம் ஆண்டு இரண்டாவது முனைவர் பட்டத்தைப் பெற்றார்.

திராவிட மொழிகளின் ஆய்வுக்கு அடித்தளம் அமைத்தவர்கள் பிரான்சிசு எல்லிசு, கால்டுவெல் முதலிய அறிஞர்கள். அவர்களையடுத்து திராவிட மொழி ஆய்வுகளை முன்னெடுத்துச் சென்ற அயல்நாட்டவர்கள் எமனோ, பர்ரோ (Burrow) முதலியோர். எமனோவிடம் பயிலும் வாய்ப்பை கமில் சுவெலபில் பெற்றார். தமது முன்னோர்களை அடியொற்றி, திராவிடமொழி இயலை மேம்படுத்தினார். அத்துடன் தமிழ் இலக்கியம், மரபு, பண்பாடு ஆகியவற்றையும் நன்கு கற்றறிந்தார். தமது எழுத்தின் மூலம் ஆய்வுகளை உலகம் அறிந்திடச் செய்தார். நூல்கள், கட்டுரைகள், திறனாய்வுகள், சிறந்த மொழிபெயர்ப்புகள் ஆகியன அவரது எழுத்துக்களில் அடங்கும்.

‘தமிழ் இலக்கியப் பேரகராதி’ (Lexicon of



பேராசிரியர் கமில் சுவெலபில்

Tamil Literature), ‘திராவிட மொழிகள் ஓர் அறிமுகம்’ (Dravidian Linguistics: An Introduction), ‘தமிழ் இலக்கிய வரலாற்றுக்குத் துணையான ஆய்வுகள்’ (Companion Studies to the History of Tamil Literature), ‘தமிழ் செம்மொழி யாப்பிலக்கணம்’(Classical Tamil prosody), ‘நீலமலை இருளர்கள்’ (The Irulas of the Blue mountains), ‘தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தில் முருகனின் புன்னகை’ (The Smile of Murugan: on Tamil Literature of South India), ‘திராவிட மொழி ஒலிப்பியல் ஒப்பீடு’ (Comparative Dravidian Phonology), ‘சித்தர்கள் தேடிய இறவாமை’ (Siddha Quest for Immortalits), ‘சிந்து நாகரிகத்தின் காலம்: எழுத்துமுறை’ (Indus Age: The writing system), ‘தமிழ் இலக்கிய வரலாறு’ (History of Tamil Literature), ‘திருமுருகன்’ (Thirumurugan), ‘தமிழ் இலக்கியம்’ (Tamil Literature), ‘தமிழ் மொழியின் இலக்கண வரலாறு ஓர் அறிமுகம்’ (Introduction to the Historical Grammer of the Tamil Language), ‘எமது வாழ்க்கைக் கதை’ (The Story of my life), ‘தொல்காப்பியம் – சொல்லதிகாரம்’, ‘தமிழிலக்கிய அறிமுகம்’ (Introducing Tamil Literature) முதலிய இருபத்தைந்துக்கும் மேலான ஆய்வு நூல்களை படைத்தளித்துள்ளார்.

செக்கோஸ்லோவாகியாவில் உள்ள கீழையியல் துறையில் (Oreintal Institute of the Czechoslovak Academy of Sciences) தமிழ் திராவிட மொழியியல் பிரிவில் ஆய்வாளராகப் பணிபுரிந்தார். கிரேக்கம், இலத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், ருசியன், சமஸ்கிருதம், தமிழ் முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். மேலும், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, இத்தாலி, போலந்து மொழிகளையும் அறிவார்.

செக்கோஸ்லாவாகிய நாட்டின் தூதரகத்தில் பணியாற்றிய ஒரு தமிழ் அன்பர் வழியாக தமிழ் கற்கத் தொடங்கிய கமில் சுவெலபில், வானொலி வழியாகவும், நூல்கள் வழியாகவும் தமிழ்படிக்கத் தொடங்கினார்.

தென்னிந்தியாவிற்கு, குறிப்பாக சென்னைக்குக் களப்பணிக்காக பலமுறை வருகை புரிந்துள்ளார்.

கமில் சுவெலபில் கற்கவும், கற்பிக்கவும் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர். அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் 1965–66 ஆம் ஆண்டுகளிலும், ஜெர்மனி கெய்டல்பெர்க் பல்கலைக் கழகத்தில் 1967–1968 ஆண்டுகளிலும் வருகை தரும் பேராசிரியராகப் பணியாற்றினார். மேலும், டெல்லி, சென்னை, டோக்கியோ, பிலாடெல்பியா, மொஸ்கோ, லெனின் கிராட் முதலிய நகரங்களுக்குச் சென்று கற்பிக்கும் பணியில் ஈடுபட்டார்.

## *பி.தயாளன்*

பிரக் நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தில் 1968 ஆம் ஆண்டு முதல் இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்தார். பிரான்சில் 1970 ஆம் ஆண்டு வருகைதரும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். நெதர்லாந்து நாட்டின் லெய்டன் பல்கலைக் கழகத்திலும் (University of Leiden), 1992 ஆண்டு ஓய்வுபெறும் வரைக்கும் உட்ரெக் பல்கலைக் கழகத்திலும் (University of Utrech) பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

தமிழ்க் கடவுள் எனக் கருதப்படும் ‘முருகன்’ குறித்து இவர் எழுதியுள்ள ஆங்கில நூலில் முருகக் கடவுள் குறித்த பல செய்திகளை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

தமிழ்யாப்புப் பற்றி அறிஞர் சிதம்பரநாதன் செட்டியார் வழியாக ஈடுபாடு கொண்ட கமில் சுவெலபில் தமிழ்யாப்புப் பற்றி விரிவாக

ஆங்கிலத்தில் ஆய்வு நூலை எழுதியுள்ளார். இவரது யாப்பு குறித்த பல நூல்களை முனைவர் பொற்கோ மதிப்பீடு செய்து உள்ளார். 'தமிழ்–யப்பானிய'– மொழி உறவு குறித்து பல முன்வைப்புகளை வழங்கியுள்ள கமில் சுவெலபில், நீலகிரிப் பகுதியில் இருளர் பேசும் மொழிப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொண்டு ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார்.

திராவிட மொழியியல், சங்க இலக்கியம் பற்றி விரிவாக ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார். தமிழ் வழக்குச் சொற்கள் பற்றியும் எழுதியுள்ளார்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, திராவிட மொழியியலை ஆராய்ந்து, "மனித இன வரலாற்றில் திராவிடப் பண்பாடு மிகத்தொன்மையான ஒன்று" என்பதை நிறுவியுள்ளார். மேலும், "உலக நாகரீகத்தின் உயர்ந்த, அழியாத கருவூலங்களில் ஒன்றாகத் தமிழர்களின் பண்பாடு திகழ்கிறது என்பதில் ஐயமில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழி இலக்கியத்தையும், தமிழரின் நாகரிகத்தையும் இந்தியாவின் பிற மாநில மக்களும், உலகில் உள்ள பிற மக்களும், அறிந்து கொள்ள இவரது ஆங்கில ஆய்வு நூல்கள் பெருமளவு உதவியிருக்கின்றன.

கமில் சுவெலபில், நீலமலை மக்களின் மொழியியல், திராவிடர்களின் வேளாண்மைப் பரவல், தென்னிந்தியப் பண்பாடு மற்றும் சமய வரலாறு, இந்து மதம், சமஸ்கிருதச் சடங்கு நூல்கள் முதலியவற்றைப் பற்றியும் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் அளித்துள்ளார்.

சுவெலபில் என்பதற்கு எதையும் 'சிறப்பாகச் செய்பவர்', 'சரியாகச் செய்பவர்', 'அழகாகச் செய்பவர்' என்பது பொருளாகும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் வ.சுப்பையா பிள்ளை 'நிரம்ப அழகியர்' என்னும் பெயரைக் கமில் சுவெலபிலுக்குத் தமிழில் சூட்டினார்.

பேராசிரியர் பணியிலிருந்து 1992 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். பின்னர், பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்கு அருகில் உள்ள சிற்றூரில் வாழ்ந்து வந்தார். புற்று நோய் தாக்கி 2009 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் நாள் மறைந்தார் அறிஞர் கமில் சுவெலபில்!

தமிழின் இனிமை, தமிழரின் உயர்மரபு ஆகியவற்றை எண்ணித் தம்மை 'செவ்வியன்' எனவும் அழைத்துக் கொண்டவர் கமில் சுவெலபில்.

செக்கோஸ்லோவாகியா நாட்டில் (இந்த நாடு 1993 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் திகதி செக் குடியரசு, சிலோவாக்கியா குடியரசு என இரண்டாகப் பிரிந்தது) பிறந்து தமிழுக்குச் சிறந்து தொண்டாற்றிய மொழியியல் வல்லுநரானவரும், தமிழ், தமிழர் பற்றியும் பிறமொழியினருக்கு அறிமுகம் செய்து வைத்தவருமான கமில் சுவெலபில் பெயர் திராவிட இயல் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்!

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

மகிழ்ச்சியை முதன்மைப்படுத்திச் செயலாற்றக் கோருவது என புதிய சூழலுக்கேற்ப புதிய கோரிக்கைகளை முன்னெடுப்பதும் அவசியமாகிறது.

முதலாளித்துவ அமைப்புமுறையின் கீழ் "மூலதனத்தைப் பெருக்குவதற்காக மட்டுமே தொழிலாளி வாழ்கிறார். ஆளும் வர்க்கத்தின் நலனுக்குத் தேவைப்படும்வரை மட்டுமே தொழிலாளி வாழ அனுமதிக்கப்படுகிறார்" என்பதே எதார்த்தமாகும். கம்யூனிஸ்ட் அறிக்கை தெளிவாகக் குறிப்பிடுவதுபோல் "முதலாளித்துவ சமுதாயத்தில், உயிருள்ள உழைப்பு (தற்காலத்தில் தொழிலாளி செலுத்தும் உழைப்பு) என்பது திரட்டி வைக்கப்பட்டுள்ள உழைப்பைப் பெருக்குவதற்கான ஒரு சாதனம் மட்டுமே. (செயற்கை நுண்ணறிவும் அவ்வாறானதே) கம்யூனிச சமுதாயத்தில் திரட்டி வைக்கப்பட்டுள்ள உழைப்பு என்பது தொழிலாளியின் வாழ்க்கையை விரிவாக்கவும் வளமாக்கவும் மேம்படுத்தவுமான ஒரு சாதனமாகும்"

முதலாளித்துவம்தான் தொழில்நுட்பத்தை மனித சமூகத்திற்கு ஆபத்தானதாக மாற்றுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாய் கிடைக்கும் பலன்கள் சிலரின் கைகளில் குவிவதைத் தடுத்து அனைவருக்குமானதாக பகிர்ந்தளிக்க வகைசெய்வதே தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை ஆபத்தானதாக அல்லாமல் ஆக்கப்பூர்வமானதாக ஆக்கும். அதை நிறைவேற்றுவதே தொழிலாளி வர்க்கத்தின் இன்றைய கடமையாகவுள்ளது.

# ஸெலென்ஸ்கியின் இரகசியத் திட்டங்கள் அம்பலம்!

**உ**க்ரைன் ஜனாதிபதி விலொடிமீர் ஸெலென்ஸ்கி ரஸ்யாவுக்கு எதிராகச் செய்யத் திட்டமிட்டிருந்த சில இரகசியத் திட்டங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இந்தத் தகவல்களை 'வொசிங்டன் போஸ்ற்' பத்திரிகை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.


இந்தத் திட்டங்களில் உக்ரைன் எல்லையிலுள்ள ரஸ்யக் கிராமங்களைத் தாக்குவதும், ரஸ்யாவிலிருந்து ஹங்கேரிக்கு எண்ணெய் செல்லும் குழாய்களை வெடிவைத்துத் தகர்ப்பதும் அடங்கும் என வொசிங்டன் போஸ்ற் தெரிவித்திருக்கிறது. உக்ரைனின் இராணுவ இரகசிய ஆவணங்கள் கசிந்தது மூலம் இது தெரிய வந்திருக்கிறது.

"உயர் இரகசியம்" என்ற தலைப்பிட்ட இந்த இராணுவ புலனாய்வு அறிக்கைகள் மூலம் ரஸ்ய எல்லைக் கிராமங்களைத் தாக்குவது குறித்தும், ரஸ்யக் கிராமங்களுக்குள் ஊடுருவுவதற்கு உக்ரைன் படைகளைத் திரட்டுவது குறித்தும் ஸெலென்ஸ்கி ஆலோசனைகளை முன்வைத்தது தெரிய வந்திருக்கிறது. அதேநேரத்தில் "ரஸ்யாவின் இராணுவ நிலைகளைத் தாக்குவதற்கு வேண்டிய நீண்ட தூர ஏவுகணைகள் உக்ரைனிடம் இல்லை" என ஸெலென்ஸ்கி ஒரு கூட்டத்தில் தெரிவித்திருப்பதும் அந்த ஆவணங்கள் மூலம் தெரிய வந்திருக்கிறது.

ஸெலென்ஸ்கியின் இந்தத் திட்டங்கள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கும் நாடுகளிடையே குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளது. ஏனெனில், உக்ரைன் தனது எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்று சொல்லியே நேச நாடுகளிடம் ஆயுதங்களைப் பெற்று வந்துள்ளது. ஆனால் தற்போது ஸெலென்ஸ்கி போட்டுள்ள திட்டங்கள் ரஸ்யா போரை மேலும் விரிவுபடுத்தி உக்ரைனுக்கு அப்பாலும் தாக்குதல்களை நடத்த

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# கார்ல் மார்க்சின் இறுதி ஆண்டுகள்



கார்ல் மார்க்சுக்கு நல்ல ஆறுதலளித்து வந்த கார்ல்ஸ்பாத் (Karlsbad) வெந்நீர் ஊற்றுச் சிகிச்சையை ஜெர்மானிய சோசலிசத் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிராக பிஸ்மார்க் (Bismarck) கொண்டு வந்த சட்டங்கள் தடுத்தன. *1878* இலிருந்தே அவரது உடல் துன்பம் அதிகமாகி அவரது பணியையும் பெருமளவிற்குப் பாதித்தது. ஆனால் நோய்க்கும், வலிக்கும் விட்டுக் கொடுக்கும் மனிதரல்ல அவர். அந்த வகையில் அவர் இறுதி வரை தன் உடலோடு போராடிக் கொண்டேயிருந்தார்.

உடல்நிலையில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்ட உடனேயே அவர் மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தார். தனது வலிமை அனைத்தையும் திரட்டிக் கொண்டு, மூலதனத்தின் இரண்டாவது தொகுதியை பதிப்புக்கு அனுப்ப தயாரிப்புகளைத் தொடர்ந்தார். எனினும் தாங்க முடியாத தலைவலி, சித்திரவதை செய்த இருமல், நரம்பு அழற்சி, உடல் பலவீனம் ஆகியவற்றின் தொடர்த்தாக்குதல்கள் அவரது முயற்சிகளை மீண்டும் மீண்டும் தகர்த்து வந்தன. இவை சத்தமில்லாத, எனினும் வீரமிக்க போராட்டம் நிறைந்த ஆண்டுகளாகவே இருந்தன. பின்னர் ஒருமுறை எங்கெல்ஸ் குறிப்பிட்டது போல, அந்தக் காலத்தில் மார்க்சின் தயாரிப்புக் குறிப்புகள், சோர்வடையச் செய்த உடல் துயரத்துக்கெதிரான அவரது கடும் போராட்டத்திற்கான சான்றுகளாகவே இருந்தன. தனது இரும்பு உறுதியைத் தாண்டி, மார்க்ஸால் மூலதனத்தின் இரண்டாவது, மூன்றாவது புத்தகங்களை பதிப்பிப்பதற்கான தயாரிப்புகளைச் செய்ய முடியவில்லை.

**ஜென்னியின் கடைசி வருடம்**

தனது மனைவி எதிர்நோக்கிய நோயினால் ஏற்பட்ட துன்பம் அவருடைய துன்பத்தைவிட மார்க்சை மிகவும் சித்திரவதை செய்தது. நீண்ட காலமாகவே இறுதிப்படுத்த முடியாதிருந்த நோய், பின்னர் குணப்படுத்த இயலாத குடல் புற்றாக இருக்கலாம் என்று கண்டறியப்படடது. ஜென்னி தனது கடுமையான வலியை ஆச்சரியமூட்டும் பொறுமையுடன் எதிர்கொண்டார், எனினும் அவர் தனது உற்சாகத்தை மட்டும் விடவேயில்லை. வலியால் அவதியுற்றாலும் கூட, துணிச்சலை விடாத அவர் அச்சமயத்தில் ஒரு மருத்துவருக்கு எழுதியிருந்தார்: "நான் கையில் கிடைக்கும் ஒவ்வொரு சுள்ளியையும் பற்றிக் கொள்கிறேன். என் அருமை மருத்துவரே, நான் இன்னும் அதிக காலம் வாழ விரும்புகிறேன். இது குறிப்பிடத்தக்க ஒன்றுதான்: ஒருவரின் கதை முடிவுக்கு வரும் நேரம் நெருங்கி வர, வர, அவர் 'கண்ணீரின் பூவுலக மதிப்புக்காக' மேலும், மேலும் ஏங்குகிறார்."

ஜென்னி மார்க்ஸ் தனது வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில் பல்வேறுநாடுகளில் செயல்பட்டு வந்த தொழிலாளர் இயக்கங்களின் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் ஆர்வத்துடன் கவனித்து வந்தார். *1880* ஆம் ஆண்டின் இறுதியில் தமது வீட்டுக்கு வந்த ஒகஸ்ட் பேபலை (August Bebel) வரவேற்பதில் அவரும், மார்க்சும் மிகவும் மகிழ்ச்சியுற்றனனர். இலண்டனில் இருந்த இரண்டு "வயதான மனிதர்களிடம்" ஜெர்மன் கட்சியின் உள்நிலைமை, பொதுமக்களின் எண்ணப்போக்குகள் ஆகியவை குறித்து தகவல் தெரிவிக்கவே பேபல் அந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.. மார்க்ஸ் தம்பதிகளிடம் அவர் கட்சியின் உத்திகள் பற்றி விவாதித்ததுடன், சோஷியல்டெமாக்ரட் இதழுக்கு எழுதுவதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் அவர் அப்போது போட்டார். மார்க்ஸ், அவரது மனைவி ஜென்னி, எங்கெல்ஸ் ஆகிய மூவரும் நீண்டகாலமாகக் கடிதங்கள் மூலமாகவே தாங்கள் அறிந்திருந்த மக்களுடன் மிகநெருக்கமாக இருந்த ஜெர்மனி தொழிலாளர் வர்க்கத்தின் இந்த ஊக்கம் நிரம்பிய, அறிவார்ந்த தலைவர் மீது மிகுந்த தாக்கம் கொண்டனர். மார்க்ஸ் உடனடியாக அவரை மிகவும் சகோதர பாசத்துடன் "து" (du) (அதிகாரபூர்வமற்றமுறையில் அழைப்பது. ஒருமை என்றும் கொள்ளலாம்) என்று விளித்தார். மார்க்சின் வீட்டுக்குத் தான் சென்றது குறித்து முப்பதாண்டுகளுக்குப் பிறகு பேசும்போது கூட பேபல் அதனை மிகுந்த நெகிழ்ச்சியுடன் இதைக் குறிப்பிட்டார்:

"நாங்கள் இலண்டனில் கழித்த அந்த ஒரே ஞாயிற்றுக்கிழமையன்று, எல்லோரும் மார்க்சின் மேசைக்கு அழைக்கப்பட்டோம். நான் ஏற்கனவே திருமதி ஜென்னி மார்க்சுடன் அறிமுகமாகி விட்டேன். அவர் எனது பெருமதிப்பை உடனடியாகப் பெற்றுவிட்ட, தனித்துவம் மிக்க ஒரு பெண்மணி. தனது விருந்தினர்களை எப்படி உற்சாகமாகவும், அன்புடனும் உபசரிப்பது என்பதை அவர் நன்கு அறிந்தவர். அந்த ஞாயிறன்று, தனது குழந்தைகளுடன் அங்கு வந்திருந்த, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லாங்கெட் (Lounguet) ஐ மணம் புரிந்து கொண்டிருந்த ஜென்னியின் மூத்த மகளையும் சந்தித்தேன். அந்தக் காலத்தில் மனித குலத்தின் எதிரி என

எங்கும் கண்டனம் செய்யப்பட்டு வந்த மார்க்ஸ் தனது பேரக் குழந்தைகளுடன் அவ்வளவு மென்மையாகவும், அன்புடனும் விளையாடிக் கொண்டிருந்தார், அந்தக் குழந்தைகள் தமது தாத்தாவை எவ்வளவு நேசித்தனர் என்பதைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். மூத்த மகள் ஜென்னியைத் தவிர அவரது இரண்டு இளைய பெண்களான டுஸ்ஸி (Tussy) என்று அழைக்கப்பட்ட எலியனோர் (Eleanor) (இவர் பின்னாளில் ஏவ்லிங்கின் (Aveling) மனைவி ஆனார்), ல∴பார்கின் (Lafargue) மனைவியான லவுரா (Laura) ஆகியோரும் அங்கு இருந்தனர். கருத்த விழிகளைக் கொண்டிருந்த டுஸ்ஸி தனது தந்தையைப் போலவும், கருவிழிகளுடனும், சற்றே பொன்னிறக் கூந்தலுடன் இருந்த லாரா தனது தாயைப் போலவும் விளங்கினர். இருவருமே அழகாகவும், உற்சாகம் நிரம்பியவர்களாகவும் இருந்தனர்."

அடுத்த நாள் பேபல் விடைபெற வந்தபோது, மார்க்சின் மனைவி மீண்டும் வலியில் துடித்தபடி படுக்கையில் இருந்தார். அவை மிகவும் கொடுமையான மாதங்களாகவே அவருக்கு இருந்தன. மார்க்ஸ் தனது மனைவியை விட்டு விலகாமல் அருகிலேயே இருந்தார். அவருக்கு மகிழ்ச்சியூட்டும் நோக்கத்துடன், மூத்தபெண்ணையும், அவரது குழந்தைகளையும் பார்ப்பதற்காக *1881* ஜூலை, ஒகஸ்டில் பிரான்ஸ் நாட்டிற்குச் செல்ல ஒரு பயணத்தையும் ஏற்பாடு செய்தார். மீண்டும் அவர்கள் இலண்டனுக்குத் திரும்பியபோது ஜென்னி மிகவும் களைத்துப் போயிருந்தார்.

### மார்க்சுக்கு நிகழ்ந்த மிகக் கசப்பான அடி

மனைவியின் உடல்நிலை குறித்த பதற்றத்தாலும், தூக்கமின்மையாலும் முற்றிலும் சோர்ந்து போன மார்க்ஸ் *1881* இலையுதிர் காலத்தில் கடும் நிமோனியாவால் தாக்கப்பட்டார். எலியனோர், லென்சென் டெமுத் (Lenchen Demuth) ஆகியோரின் தன்னலமற்ற பணிவிடையின் காரணமாகவே அவர் மீண்டார். ஜென்னியும், மார்க்சும் சேர்ந்து வாழ்ந்த கடைசி நாட்களைப் பற்றி எழுதிய எலியனோர், "என் அன்னையின் அறைக்குச் செல்லப் போதிய பலத்தை அவர் பெற்ற காலை நேரத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார். "அந்த நேரத்தில் அவர்கள் மீண்டும் இளைஞர்களாக ஆனார்கள். புதியதொரு வாழ்க்கையைத் தொடங்கப் போகும் தம்பதியாக, அவள் அன்பான ஓர் இளம் பெண்ணாகவும், அவர் காதல்வயப்பட்ட ஓர் இளைஞனாகவும் அப்போது தோன்றினர். நோயால் தகர்ந்துபோன ஒரு முதியவராகவோ, மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு முதிய பெண்மணியாகவும், நிரந்தரமாக ஒருவருக்கொருவர் விடைபெறப் போகின்றவர்களாக அவர்கள் இருவரும் அப்போது இல்லை."

ஜென்னி அனுபவிப்பதற்கு இன்னும் சில மகிழ்ச்சியான தருணங்கள் மீதமிருந்தன. மூலதனத்தின் மூன்றாவது பதிப்பு தேவைப்படுவதாக ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி வந்தது. இங்கிலாந்திலிருந்து முதன்முறையாக மார்க்சை குறிப்பிடத்தக்க ஒரு விஞ்ஞானி எனவும், சோசலிச சிந்தனையாளர் என்றும் பாராட்டி ஒரு முன்னணிப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்தது. ஒக்ரோபர் இறுதியில் வென்றெடுத்த ஒரு தேர்தல் வெற்றியின் மூலமாக, நெருக்கடிநிலைச் சட்டங்களைத் தாண்டி தான் போராடுவதையும், மார்க்சின் படிப்பினைகளால் அதிகமான அளவில் தாக்கம் பெற்று வருவதையும் ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

### எங்கெல்சின் பாராட்டு

*1881* டிசம்பர் *2* அன்று ஜென்னி காலமானார். மார்க்ஸ் தாங்க வேண்டியிருந்த மிகவும் கசப்பான தாக்குதல் அது. தனது அன்பிற்குரிய மனைவியின் இளைப்பாறும் இடத்துக்குக்கூட அவரால் உடனே செல்ல முடியவில்லை. அவரது பலவீனமான உடல்நிலை காரணமாக, ஹைகேட் (Highgate) கல்லறைக்குச் செல்லும் ஜென்னியின் இறுதி யாத்திரையில் பங்கேற்க மருத்துவர்கள் மார்க்ஸை அனுமதிக்கவில்லை. கல்லறையில் ஜென்னியின் இறுதி நிகழ்ச்சியில் அஞ்சலி உரை நிகழ்த்திய எங்கெல்ஸ், கணவர் மீதும், குடும்பத்தினர், தோழர்கள் மீதும் ஜென்னி வைத்திருந்த பாசம் குறித்தும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் மீதான அவரது விசுவாசம் குறித்தும் சுட்டிக் காட்டினார். பின்வரும் வார்த்தைகளுடன் அவர் தன் உரையை நிறைவு செய்தார்:

"இவ்வளவு கூர்மையான, விமர்சனப் புரிதலுள்ள ஒரு பெண்மணி, இவ்வளவு பாசமும் ஊக்கமும் உடையவர், இவ்வளவு பெரும் அர்ப்பணிப்புத்திறன் கொண்ட ஒருவர் – புரட்சிகர இயக்கத்துக்குச் செய்த பங்களிப்புகள் குறித்து ஒருபோதும் வெளிப்பார்வைக்குத் தென்பட்டதில்லை. எந்தப் பத்திரிகையும் அதை வெளியிட்டதுமில்லை. அவருடன் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே அவர் செய்தது தெரியும்.

அவரது தனிப்பட்ட குணநலன்கள் குறித்து நான் பேசவேண்டியதில்லை. அவரது நண்பர்களுக்கு அவற்றைக் குறித்து தெரியும், அவர்கள் அதை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் ஒரு பெண் தனது சொந்த மகிழ்ச்சியைக் கண்டிருப்பார் என்றால், அது இந்தப் பெண்தான்."

தனது மனைவியின் மரணத்திலிருந்து கார்ல் மார்க்சால் விடுபடவே முடியவில்லை. "மூர் (Mohr) –உம் (மார்க்ஸின் நண்பர்கள் அவரை 'மூர்' என்றே அழைப்பார்கள்) இறந்துவிட்டார்" என்று ஜென்னி இறந்த அந்த நாளில் எங்கெல்ஸ் உண்மையாகவே குறிப்பிட்டார். எனினும் வாழவேண்டும் என்ற உறுதி அவருக்குள் மீண்டும் எழுந்தது. அவரை செயலின்மைக்குத் தள்ளிய அந்தத் துன்பமிக்க நோயை வெல்ல அவர் உறுதியோடு இருந்தார். "நான் மீண்டு எழுவதற்கு சிறிது காலத்தை இழக்க வேண்டியுள்ளது என்பது துரதிர்ஷ்டம்தான்" என்று அமெரிக்காவிலிருந்த நண்பர் சோர்கே (Sorge) இற்கு அவர் கடிதம் எழுதினார்.

### அல்ஜீரியப் பயணம்

மருத்துவர்களின் ஆலோசனைப்படி நல்ல பருவநிலை நிலவிய இடங்களில் அடுத்த சில மாதங்களைக் கழித்து தன்னை மீட்டுக்கொள்ள அவர் முயன்றார். வைட் (Wight) தீவின் வெண்ட்னோர் (Ventnor) இற்கு அவர் முதலில் சென்றார். *1882* வசந்த காலத்தில் அவர் அல்ஜியர்சுக்குச் சென்றார். ஆனால் ஜென்னி இல்லாத மனவலி அவரை எங்கும் பின்தொடர்ந்தது. அத்தருணத்தில் அவர் எங்கெல்சுக்கு நெகிழ்ச்சியுடன் எழுதினார்,

"நடைமுறையில் சோக உணர்வுக்கு எதிராக மிகச்சில மனிதர்களே இருப்பார்கள் என்பது உங்களுக்குத்

தெரியும். எனினும், எனது சிந்தனைகளின் பெரும்பகுதி என் மனைவியின் நினைவுகளாலேயே நிரம்பியுள்ளது என்பதை நான் ஏற்கவில்லையெனில் அது பொய்யாகவே இருக்கும். அவள் எனது வாழ்வின் மிகச்சிறந்த ஒரு பகுதி.”

எனினும், மிகவும் நோயுற்றிருந்த போதும் இந்த வாரங்களில் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் எதையாவது புதிதாகக் கற்றுக்கொள் வதற்கு அவர் பயன்படுத்திக் கொண்டார். அல்ஜியர்சில் தனது மருமகனின் நண்பரான லாங்கெட் (Lounguet) ஐ அவர் சந்தித்தார். லாங்கெட் அரபு மக்கள் அவதிப்பட்ட காலனிய ஒடுக்குமுறையின் நாகரீகமான, கொடூரமான வடிவங்களைப் பற்றிய பல முக்கியமான விவரங்களை மார்க்சுக்கு எடுத்துரைத்தார். அதேபோன்ற கவனத்துடன் அவர் ஐரோப்பியத் தொழிலாளர்கள் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்டு, கடிதங்கள் வாயிலாக எங்கெல்சுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு வந்தார்.


அல்ஜீரியப் பயணம் அவரது உடல்நிலையில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. தெற்கு பிரான்சில் தங்கியதும் எந்தவித முன்னேற்றத்தையும் தரவில்லை. பின்னர் தனது மூத்த மகள் ஜென்னியை பாரிசின் அருகில் பார்க்கச் சென்றதும், பின் கோடையில் சுவிட்சர்லாந்துக்குச் சென்றதும்தான் அவருக்கு சற்று மெலிதான ஆறுதலை வழங்கியது. இதற்கிடையில் பேபலின் மரணம் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. அவர் எங்கெல்சுக்கு எழுதினார்:

“இது நமது கட்சிக்கு மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஜெர்மானிய (ஐரோப்பிய என்றும் குறிப்பிடலாம்) தொழிலாளி வர்க்கத்தில் தனித்துவமிக்க தலைவர் அவர்.”

அதிர்ஷ்டவசமாக, விரைவில் அந்தச் செய்தி பொய் என்று தெரிய வந்தது.

**மூத்த மகளின் மரணம்**

ஒக்ரோபரில் மார்க்ஸ் சற்று வலுவான உடல்நிலையுடன் இங்கிலாந்து திரும்பினார். அவர் மூலதனம் நூலின் இதர தொகுதிகளுக்கான தனது பணியை மீண்டும் துவக்கவும், (ஜெர்மன்) கட்சிப் பத்திரிகையான “தெ சோசியல் டெமாக்ரட்” (Der Sozialdemokrat) இற்குக் கட்டுரைகள் எழுதவும் ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்தார். எனினும் அவரது



உடல்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் தற்காலிகமானதாகவே இருந்தது. நவம்பர் மாதத்தில் இலண்டனின் பனியிலிருந்து தப்பிக்க அவர் வெண்ட்னாருக்குச் சென்றார். ஆனால் அங்கும்கூட பனிக்காலத்தின் குளிரும், ஈரமும், அவரது உடல் நிலைக்கும் மேலும் துன்பத்தை ஏற்படுத்தின. அது இன்னும் மோசமாகும் வகையில், அவரது மூத்த மகள் ஜென்னியின் மரணச் செய்தி வந்து சேர்ந்தது. இந்தச் சோகச் செய்தியை அவரிடம் கொண்டு வந்த எலியனார் எழுதினார்:

“வாழ்வில் எனக்கு பல சோகமான தருணங்கள் இருந்துள்ளன, ஆனால் அவை எதுவும் இவ்வளவு சோகமயமானதாக இருந்ததில்லை.” தன் தந்தைக்கு ஜென்னியின் மரணம் எத்தகைய துயரத்தை ஏற்படுத்தும் என்பதும் அவருக்குத் தெரியும். “என் தந்தைக்கு நான் மரண தண்டனையை விதித்து விட்டதாகவே எனக்குத் தோன்றியது. மிக நீண்ட, அச்சத்திற்குரிய இந்தப் பயணத்தில் இந்தச் செய்தியை நான் தந்தையிடம் எப்படிச் சொல்வது என்றுதான் மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தேன். ஆனால் இந்தத் துயரச் செய்தியை அவரிடம் சொல்ல வேண்டிய தேவையே இருக்கவில்லை. என் முகமே என்னைக் காட்டிக் கொடுத்து விட்டது. மூர் உடனடியாகக் கூறினார்: “எனதருமை ஜென்னிசென் (Jennychen) இறந்து விட்டாள்!”. அதன் பிறகு உடனடியாக பாரிசுக்குச் சென்று ஜென்னியின் குழந்தைகளுக்கு உதவுமாறு எனக்கு அவர் உத்தரவிட்டார்.”

**தூக்கத்தில் மரணம்**

மறுநாள் மார்க்ஸ் இலண்டன் திரும்பினார். தொண்டைக்குழாயில் ஏற்பட்டிருந்த அழற்சியுடன் சேர்ந்து இன்னொன்றும் அவரை மீண்டும் படுக்கையில் தள்ளியது. பல வாரங்களுக்கு அவரால் நீராகாரம் மட்டுமே எடுத்துக்கொள்ள முடிந்தது. பெப்ரவரியில் அவருக்கு நுரையீரலில் கட்டி உருவானது.

மார்ச்சில் அவர் மீண்டு வருவார் என்ற நம்பிக்கை அதிகரித்தது. லென் சென்னின் கனிவான கவனிப்பில் அவரது முக்கிய நோய்கள் கிட்டத்தட்ட சரியாகின. ஆனால் மார்க்சின் தோற்றம் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. இந்தக் காலத்தில் தினமும் வீட்டுக்குச் சென்று அவரை பார்க்கும் எங்கெல்ஸ் மார்ச் 14 அன்று மதியநேரம் அங்கு வந்து சேர்ந்தார். லென் சென் அவரைப் பார்த்து மார்க்ஸ் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாகக் கூறினார். “நாங்கள் அறைக்குச் சென்றபோது, அவர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார், ஆனால் ஒரு போதும் இனி எழமாட்டார் என்றும் தெரிந்தது. அவரது நாடித் துடிப்பும், மூச்சும் நின்று போயிருந்தன. அந்த இரண்டே நிமிடத்தில் அமைதியாக, வலியின்றி அவர் உயிரை நீத்திருந்தார்” என்று அவர் மார்க்சின் நண்பர் சோர்கேவுக்கு பின்னர் எழுதினார்.

எங்கெல்ஸ் மேலும் எழுதினார்: “மனித இனத்தில் ஒரு தலை குறைந்து விட்டது, இந்தத் தலை நம் காலத்தில் மிகவும் பெரிய தலை. தொழிலாளர்களின் இயக்கம் தொடர்கிறது. ஆனால் பிரெஞ்சுக்காரர்களும், ரஷ்யர்களும், அமெரிக்கர்களும், ஜெர்மானியர்களும் தீர்மானகரமான தருணங்களில் ஆலோசனை வேண்டித் திரும்பிய, மறுக்கமுடியாத, தெளிவான ஆலோசனையைக் கொடுத்து வந்த அந்த மையப்புள்ளி இப்போது மறைந்து விட்டது. முழுநிறைவான அறிவுபெற்ற ஒரு மேதையால்தான் அத்தகைய அறிவுரைகளைக் கொடுக்க முடியும்.”

எங்கெல்சுடன் சேர்ந்து உலகின் அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் அஞ்சலி செலுத்தினர். 1883 மார்ச் 17 அன்று கார்ல் மார்க்ஸ் ஹைகேட் இடுகாட்டில் தன் மனைவியின் உடலுக்கருகே அடக்கம் செய்யப்பட்டார்.

உலகத் தொழிலாளர் இயக்கம் தனது மாபெரும் தலைவருக்கு விடைகொடுத்தது. வில்லியம் லீப்னெஹ்ட் (Wilhelm Liebknecht) ஜெர்மனி தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் மார்க்சின் கல்லறையில்

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# ஜி-7 நாடுகளை முந்தியது பிரிக்ஸ், தகர்கிறது ஒற்றை மேலாதிக்கம்



**பி**ரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளின் வளர்ச்சி, ஜி−7 நாடுகளைப் பொருளாதார ரீதியில் பின்னுக்குத் தள்ளியுள்ளது. உலகப் பணக்கார நாடுகள் என்ற பட்டியலில் முன்னணியில் உள்ள கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து ஜி−7 அமைப்பை உருவாக்கியுள்ளன. இதில் ரஷ்யாவும் இணைந்திருந்தது. அப்போது ஜி−8 நாடுகள் என்று அழைக்கப்பட்டன. ரஷ்யா அதிலிருந்து வெளியேற்றப்பட்டதால் ஜி−7 என்ற பெயருடன் மற்ற நாடுகள் தொடர்கின்றன. உலகப் பொருளாதார சூழலை இந்த நாடுகள்தான் தீர்மானித்து வந்தன. இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் அதிர்வலைகள் இருந்தால், உலகப் பொருளாதாரமே நெருக்கடிக்கு உள்ளாகும்.

1991 ஆம் ஆண்டில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பின்னடைவுக்குப் பின்னர், அமெரிக்காவின் ஒற்றை மேலாதிக்கம் தொடங்கியது. ஆனால், 2009 ஆண்டில் நடந்த முதல் பிரிக்ஸ் மாநாடு உலக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தியது. பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றன. 2010 ஆம் ஆண்டில் இந்தக் குழுவில் தென் ஆபிரிக்கா இணைந்ததால் பிரிக்ஸ் (BRICS) என்று அழைக்கப்பட்டது. பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பன்முகத்தன்மை கொண்ட பொருளாதாரம் ஆகியவை பிரிக்ஸ் நாடுகளின் பலமாகப் பார்க்கப்படுகிறது. மேலும், பிரிக்ஸ் அமைப்பின் வளர்ச்சி மற்றும் பலன்களால் பல நாடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. சவூதி அரேபியா, அல்ஜீரியா, ஆர்ஜென்ரீனா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

பிரிக்ஸ் அமைப்பின் விரிவாக்கம் பற்றிய தனது "ஐ.எம்.எப் (IMF) மற்றும் உலக வங்கியை பிரிக்சால் சமாளிக்க முடியுமா?" என்ற தலைப்பிலான கட்டுரையில், தற்போது எழுந்துள்ள நிலைமை மிகப்பெரிய வாய்ப்புகளும், சவால்களும் அடங்கியதாகும் என்று பாலஸ்தீன−அமெரிக்க செய்தியாளர் ராம்சி பரோடு குறிப்பிட்டிருக்கிறார். உலக புவியரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் பிரிக்ஸ் அமைப்புக்கு அது வாய்ப்பாகப் பார்க்கப்படுகிறது. அதே வேளையில், தனது வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொண்டு, விரிவாக்கம் செய்வது சவாலான பணியாகும்.

### பிரிக்ஸ் முந்தியது

அண்மையில் வெளியான நிதித்துறைகளின் அறிக்கைகள்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில் உலகின் மிகப்பெரிய அமைப்பாக பிரிக்ஸ் மாறியுள்ளது. பிரிக்ஸ் அமைப்பில் உள்ள ஐந்து நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.5 விழுக்காட்டைக் கொண்டிருக்கிறது. இதே வேளையில், ஜி−7 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 30.7 விழுக்காடாக இருக்கிறது. புதிய நாடுகள் இந்த அமைப்பில் இணைந்தால், உலகின் பாதியை விரைவில் எட்டிவிடலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

வளரும் நாடுகளுக்கு கடன் தருகையில், ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கி ஆகிய இரண்டும் பல்வேறு நிபந்தனைகளை விதிக்கும் வழக்கமுள்ளது. மனித உரிமை மற்றும் ஜனநாயகம் என்று அரசியல் பிரச்சனைகளை எல்லாம் கடன் வழங்கும் போது இந்த நிதி நிறுவனங்கள் பேசுகின்றன. இவற்றைப் பேசிவிட்டு, அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுப் பணிகள் அனைத்தையும் தனியார்மயமாக்க வேண்டும் என்று நிபந்தனைகளைப் போடுவார்கள். மனித உரிமை மற்றும் ஜனநாயகம் என்பதெல்லாம் வெறும் பேச்சுக்குதான் என்பது தனியார்மயமாக்கும் நாடுகளுக்கு கடன்களை வாரி வழங்குவதில் தெரிந்துவிடும்.

இந்நிலையில், பிரிக்ஸ் நாடுகள் புதிதாக உருவாக்கியுள்ள புதிய வளர்ச்சி வங்கி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. 5 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் என்ற முதலீட்டில் அந்த வங்கியைத் தொடங்கியுள்ளார்கள். பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி டில்மா ரூசெப் (Dilma Rousseff) வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கடன்களுக்கு மாற்று ஏற்பாடுகளைத் தேடி வரும் நாடுகளுக்கு இந்த வங்கி வடிகாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் பிரிக்ஸ் கூட்டமைப்பு வர்த்தகத்தை எளிதாக்க புதிய நாணயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. ஏதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள வருடாந்திர பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் புதிய நாணய உருவாக்கம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**12 ம் பக்கத்தொடர்ச்சி...**

உறுதியேற்றார். "இத்தருணத்தில் நாம் சோகத்தில் ஆழ்வதற்குப் பதிலாக, மறைந்த தலைவரின் உணர்வின்படி செயல்படுவோம். அவர் நமக்குக் கற்பித்ததையும், ஆசைப்பட்டதையும் கூடிய விரைவில் நிதர்சனமாக்க, அனைத்து வலுவுடனும் நாம் போராடுவோம். இந்த வழியில் அவரது நினைவைப் போற்றுவோம்! மிகுந்த அன்பிற்குரிய நண்பரே! நீங்கள் எங்களுக்குக் காட்டிய பாதையில் இறுதிவரையில் நடைபோடுவோம். உங்கள் கல்லறையில் அதை உறுதிமொழியாக அளிக்கிறோம்!"

**தமிழில்: ரமேஷ்**

(பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழில் வெளியானது)

**முன்பக்கத்தொடர்ச்சி…**

தலைமைகள் பின்பற்றிய தமிழ் மேட்டுக்குழாமினரின் நலன் காக்கும் கொள்கையையே ஆயுதப் போராட்டம் நடத்திய தலைமைகளும் பின்பற்றின. தமிழ் சமூகத்தில் பிரதான பிரச்சினைகளாக இருந்த சாதிய ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம் போன்ற பிரச்சினைகள் தமிழ் தேசியம் என்ற சாட்டைக்கு முன்னால் மௌனிக்க வைக்கப்பட்டன.

அதன் காரணமாகவே முன்னைய தலைமைகள் நடத்திய அகிம்சை வழிப் போராட்டங்கள் தோல்வி கண்டது போலவே, பின்னைய இளம் தலைமுறையினர் நடத்திய ஆயுத வழிப் போராட்டமும் தோல்வியில் முடிந்தது.

தமிழ் மக்களின் முதலாளித்துவத் தலைமைகளின் போராட்டங்கள் தோல்வியடைந்துவிட்டதன் காரணமாக தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்கான – நியாயமான உரிமைகளுக்கான கோரிக்கையும் அற்றுப் போய்விட்டதாகவோ அல்லது வழக்கொழிந்து போய்விட்டதாகவோ இதன் அர்த்தம் அல்ல. அந்தத் தேவை இன்னமும் இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால் அதற்கான ஒரு சரியான தலைமையும், சரியான கொள்கைகளும் இல்லாதிருப்பதே இன்றைய பிரச்சினையாகும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் சில தனிநபர்கள் தமிழ் மக்களின், குறிப்பாக வட பகுதி தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் சாதியப் பிரச்சினை சம்பந்தமான, அதை இல்லாதொழிப்பதற்கான கருத்தியல் பிரச்சாரமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர். (இம்முறை அந்த இயக்கம் சாதிய ஒடுக்குமுறை தீவிரமடைந்ததன் காரணமாக எழுந்ததல்ல. மாறாக, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள இளம் தலைமுறையினரின் விழிப்புணர்வு காரணமாகவும், அவர்கள் மத்தியில் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தில் ஏற்பட்ட ஓரளவு உயர்ச்சி காரணமாகவும் ஏற்பட்டுள்ளது எனலாம்) அவர்கள் இந்தப் பிரச்சாரத்தை ஆரம்பித்ததில் எவ்வித தவறும் இல்லை. ஆனால் அவர்களது அணுகுமுறையில்தான் தவறுகள் இருக்கின்றன. அந்தத் தவறுகள் என்னவென்று பார்த்தால் – சாதியத்துக்கு எதிராக அவர்கள் தொடங்கியுள்ள பிரச்சாரம் ஒரு அமைப்பு ரீதியிலானதாக செயற்பாடாக இல்லாமல் தனிமனித ரீதியானதாக இருப்பது பலவீனமானது.

சிறுபான்மையினரான ஒரு தொகை சாதி வெறியர்களுக்கு எதிரான போராட்டமாக இல்லாமல், சனத்தொகையில் பெரும்பான்மையினரான முழு உயர் சமூகத்தினருக்கும் எதிரானதாக அவர்களது அணுகுமுறை உள்ளது. (தமிழகத்தில் உள்ள பிராமணர்களுக்கு எதிரான போராட்டத்தை அவர்கள் உதாரணம் காட்டுகின்றனர். ஆனால் தமிழக சனத்தொகையில் பிராமணர்களின் தொகை சுமார் 2 வீதம்தான். ஆனால் இலங்கை வடபகுதித் தமிழர்களில் 60 வீதமானவர்கள் வெள்ளாளர் உட்பட உயர் சமூகத்தினர் என்பதைக் கணக்கில் எடுக்க வேண்டும். எனவே சாதி வெறியர்களின் தொகையைக் குறுக்கி அவர்களைப் பலவீனப்படுத்த வேண்டும்))

சாதியத்தை ஒழிப்பதற்கான ஒரு வழிமுறையாக பௌத்த மதத்தை ஆதரிப்பதை ஊக்குவிக்கின்றனர். அதற்கு இந்தியாவில் அம்பேத்கரை உதாரணமும் காட்டுகின்றனர். உண்மையில் சாதியப் பிரச்சினை என்பது பொருளாதார ஏற்றத்தாழ்வுடன், வர்க்க சமுதாயத்துடன் வேர்கொண்டு கிடப்பதால் மதம் மாறுவதால் மட்டும் இப்பிரச்சினை தீர்ந்துவிடாது. உதாரணமாக சாதிய ஒடுக்குமுறையிலிருந்து தப்புவதற்காக கிறிஸ்தவத்தில் சேர்ந்தோரின் நிலை என்ன? அதுமட்டுமின்றி ஒரு லட்சம் மக்களுடன் பௌத்த மதத்தில் இணைந்த போதும் அம்பேத்கரால் இந்தியாவின் சாதியமைப்பை ஒரு அங்குலம் தன்னும் அசைக்க முடியவில்லை.

அது மட்டுமின்றி, சாதியத்துக்கு எதிரான போராட்டத்தைச் சிலர் தமிழ் தேசிய உரிமைக்கான போராட்டத்துக்கு எதிரான நிலையில் வைக்க முயல்கின்றனர். இதுவும் தவறான ஒரு நிலைப்பாடாகும்.

இடதுசாரிகளான நாம் கடந்த பல தசாப்தங்களாக வடக்கில் சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிராக பல போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறோம். அதற்காகப் பல தியாகங்களையும் செய்திருக்கிறோம். அதன் காரணமாக சில குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற்றிருக்கிறோம்.

சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் கடந்த காலத்தில் மூன்று விதமான அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. அவையாவன:
சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை தனியே தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே நடத்துவது. தோழர் எம்.சி.சுப்பிரமணியம் தலைமையிலான சிறுபான்மைத் தமிழர் மகாசபை பெரும்பாலும் இதன் அடிப்படையிலேயே தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது.

இன்னொன்று தாழ்த்தப்பட்ட மக்கள் பௌத்த மதத்தைத் தழுவுவதன் மூலம் சாதியத்தில் இருந்து விடுபடுவது. இதற்காக வைரமுத்து என்ற பெரியாரின் தலைமையில் தமிழ் பௌத்த காங்கிரஸ் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு பல தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக இளைஞர்கள் பௌத்த மதத்திலும் இணைந்தார்கள். இந்த அமைப்பு வடக்கில் சில பௌத்த பாடசாலைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி கற்பதற்கென ஆரம்பித்ததைத் தவிர வேறு எதையும் சாதிக்க முடியவில்லை. இன்று அந்த அமைப்பு செயலிழந்து போய்விட்டது.

அடுத்ததாக புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் உருவாக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1960களில் முன்னெடுத்த தீண்டாமைக்கும் சாதியமைப்புக்கும் எதிரான போராட்டங்கள். இந்தப் போராட்டம் உயர்சாதி வெறியர் பிரயோகித்த பிற்போக்கு பலாத்காரச் செயல்களை புரட்சிகர பலாத்கார செயல்களால் எதிர்கொண்டது. அத்துடன், சாதிப் பிரச்சினை என்பது தனியே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினை அல்ல, அது ஒடுக்குமுறையும் சுரண்டலும் இணைந்த ஒரு வர்க்கப் பிரச்சினை என்றபடியால் முழுத் தமிழ் சமூகத்தினதும் பிரச்சினை என்பதை உணர்த்தி, அந்தப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுடன் நீதியை விரும்பும் உயர் சமூக மக்களையும் ஈடுபட வைத்தது. அதுமட்டுமின்றி நாட்டின் ஏனைய பாகங்களில் வசிக்கும் முற்போக்கான சிங்கள – முஸ்லீம் – மலையக மக்களையும் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக அணி திரட்டியது. அதன் காரணமாக அந்தப் போராட்டம் கணிசமானளவு ஒரு

வெற்றியைப் பெற்றது.

உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேசிய இனப் பிரச்சினை என்பது முதலாளித்துவத் தமிழ் தேசியவாதிகள் நினைப்பது போல வெறும் தேசியப் பிரச்சினை மட்டும் அல்ல. தமிழ் மக்களின் பிரச்சினை என்பது தேசிய ஜனநாயகப் பிரச்சினையாகும். அது ஒருபுறத்தில் சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தமிழ் மக்களின் தேசிய உரிமைகளைப் பெறப் போராட வேண்டியுள்ளது. மறுபக்கத்தில் தமிழினம் தனது சமூகத்தின் உள்ளே உள்ள சாதியமுறை, வர்க்கபேதமுறை போன்ற ஜனநாயக விரோதப் போக்குகளுக்கெதிராகவும் போராட வேண்டியுள்ளது. அதனால்தான் இடதுசாரிகளான நாம் தமிழ் மக்களின் பிரச்சினை என்பது ஒரு 'தேசிய ஜனநாயகப் பிரச்சினை' என முழுமையான அர்த்தத்தில் கூறுகின்றேம்.

ஆனால், யதார்த்தத்தில் இதுவரை காலமும் நடந்தது என்ன? முதலாளித்துவத் தமிழ்த் தேசியவாதிகள் தமிழ் சமூகத்தில் இருந்த சாதியத்தையும், வர்க்க பேதத்தையும் புறம்தள்ளிவிட்டு, வெறுமனே தேசியப் போராட்டம் மட்டும் நடத்தினர். அதனால் அது தோல்வி கண்டது.

இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உள்ள சிலர் தேசியத்தையும், வர்க்க பேதத்தையும் புறம்தள்ளிவிட்டு, வெறுமனே சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை மட்டும் நடத்த எத்தனிக்கின்றனர். எனவே இதுவும் முழுமையான ஒரு போராட்டம் இல்லை என்றபடியால் வெற்றி பெறும் சாத்தியம் இல்லை.

எனவே, முற்போக்கு சக்திகள் தமிழ் சமூகத்தின் உண்மையான நிலையைப் புரிந்து கொண்டு, முழுமையான முறையில் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயகப் போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும்.

# அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாச்சாரம்!

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் இறப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மே மாத முற்பகுதியில் டல்லாஸ் பகுதியில் உள்ள சனசந்தடிமிக்க பகுதியில் 33 வயது நிரம்பிய துப்பாக்கிதாரி ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பொதுமக்கள் துடிதுடிக்க இறந்துள்ளனர், அதேயளவு தொகை காயமடைந்துள்ளனர்.

அதற்கு முதல் வாரம் ஒக்லகோமா என்ற இடத்தில் ஒரு பாலியல் குற்றவாளி தனது மனைவியையும், மூன்று பிள்ளைகளையும், அவர்களது இரண்டு நண்பர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொன்றுள்ளான்.

அதற்கு இருநாட்கள் முன்னதாக துப்பாக்கிதாரி ஒருவன் 9 வயது சிறுவன் உட்பட 5 அயலவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளான்.

துப்பாக்கி வன்செயல் சம்பந்தமாக ஆவணப்படுத்தும் அமெரிக்க நிறுவனத்தின் தகவலின்படி, இந்த வருடம் இதுவரை அமெரிக்காவில் 200 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும், அதில் பலர் இறந்தும் காயமடைந்தும் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. வருடாவருடம் அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் தொகை 100 ஆல் அதிகரித்து வருகின்றது. கடந்த மூன்று வருடங்களில் மொத்தமாக 600 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அதாவது இரண்டு நாட்களுக்கு ஒருமுறை துப்பாக்கிச்



சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

இதனால் அமெரிக்காவுக்குச் செல்லும் தமது நாட்டுப் பிரசைகளை எச்சரிக்கையாக இருக்கும்படி சில நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. நியூசிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ், வெனிசூலா, உருகுவே என்பனவே அந்த நாடுகள். இவற்றில் இரண்டு நாடுகளைத் தவிர ஏனைய ஐந்து நாடுகளும் அமெரிக்காவின் மேற்குலக நட்பு நாடுகளாகும்.

அமெரிக்காவில் இத்தகைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, அமெரிக்காவின் சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்பின் காரணமாக மனிதர்கள் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுப் போய் மனநிலை பிறழ்ந்தவர்களாக மாறி வருவது. இரண்டாவது, உலகிலேயே அமெரிக்காவில் மட்டுமே எவரும் எந்தக் கட்டுப்பாடும் இன்றி கடைகளில் துப்பாக்கியை வாங்க முடியும் என்பது.

அமெரிக்காவில் துப்பாக்கிப் பாவனை எந்தளவுக்கு உள்ளது என்பதற்கு ஒரு உதாரணம், அமெரிக்காவில் உள்ள மக்களில் 100 பேருக்கு 120 துப்பாக்கிகள் பாவனையில் உள்ளன என சுவிற்சிலாந்தைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம் ஒன்று கூறியிருக்கிறது. அதாவது, ஒருவருக்கு ஒரு துப்பாக்கிக்கு மேல் உள்ளது. இதனால் ஏற்படக்கூடிய விபரீதம் எப்படியிருக்கும் என்பதை ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள்!

"மற்றைய மேற்கத்தைய கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவின் பொதுவான குற்றச் செயல்கள் சமமானவை என்ற போதிலும், துப்பாக்கி வன்செயல்கள் அமெரிக்காவில் மிகவும் அதிகமானவை" என, "குற்றம் அல்ல பிரச்சினை" என்ற தமது நூலில் Franklin Zimring, Gordon Hawkins என்ற எழுத்தாளர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாச்சாரம் அமெரிக்கப் பிரசைகளை மட்டுமின்றி, சுற்றுலாப் பயணிகளையும் பாதித்து வருவதால், எதிர்காலத்தில் அமெரிக்காவின் சுற்றுலாத்துறை பாதிக்கப்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

வழிவகுத்து விடுமோ என மேற்கத்தைய நாடுகள் அஞ்சுகின்றன.

உக்ரைன் அதிபர் ரஸ்யாவுக்கு எதிராகப் போட்டுள்ள புதிய திட்டங்கள் அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநிலத்திலுள்ள தேசிய பாதுகாப்புப் பிரிவில் பணி புரிந்த Jack Teixeira என்ற 21 வயது இளைஞர் மூலமே கசிந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

‘Vaanavil’ is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# அமெரிக்காவே நம்பர் 1 பயங்கரவாதி

பணக்கார நாடுகளின் கூட்டமைப்பான ஜி–7 உச்சி மாநாட்டிற்கு எதிராக ஜப்பான் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய ஏழு நாடுகள் ஜி–7 அமைப்பில் இடம் பெற்றுள்ளன. சுழற்சி முறையில் தலைமைப் பொறுப்பு வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில் தற்போது ஜப்பானின் பிரதமர் ஃபுமியோ கிஷிடா (Fumio Kishida) இடம் அந்தப் பொறுப்பு உள்ளது. நடப்பாண்டுக்கான உச்சி மாநாட்டை ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நடத்துவது என்று அவர் முடிவெடுத்தார். இந்தக் கூட்டத்தில் ஜி–7 உறுப்பு நாடுகள் மட்டுமில்லாமல், இந்தியா, தென் கொரியா, அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, கோமோரோஸ் ஆகிய நாடுகள் மற்றும் சில பன்னாட்டு அமைப்புகளும் இதில் பங்கேற்றுள்ளன.

இந்த உச்சிமாநாட்டிற்கு ஹிரோஷிமா நகரைத் தேர்வு செய்தது ஜப்பான் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இரண்டாம் உலகப் போர் நிறைவு பெற்ற நிலையிலும், அமெரிக்கா தான் உருவாக்கிய அணுகுண்டைப் பரிசோதனை செய்யும் விதமாக நாகசாகி மற்றும் ஹிரோஷிமா ஆகிய இரு நகரங்கள் மீதும் குண்டுகளை வீசியது. தற்போது உச்சிமாநாடு நடைபெறும் ஹிரோஷிமாவில் மட்டும் 1 இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டார்கள். அத்தோடு, அந்தக் குண்டு வீச்சில் வெளிப்பட்ட கதிரியக்கத்தால் தலைமுறை, தலைமுறையாக அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

1945 ஆம் ஆண்டில் இருந்தே, அணுகுண்டு வீச்சின் பாதிப்புகளை குறைத்து மதிப்பிடுவதற்காகத் தனது பிரச்சாரத்தை அமெரிக்கா மேற்கொண்டு வந்தது. இந்த இரண்டு நகரங்கள் மீது குண்டு வீசி மக்களை பரிசோதனைக்கு உள்ளாக்கிய அமெரிக்கா தனது செயலுக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என்று மக்கள் கோரி வருகிறார்கள். ஜோ பைடன் ஜனாதிபதியாகப்




பொறுப்பேற்றவுடன் அத்தகைய கோரிக்கை மீண்டும் எழுந்தது. ஆனால், அவர் மன்னிப்புக் கோர முடியாது என்று மறுத்துவிட்டார். இதனால் உச்சிமாநாடு நடக்கும் ஹிரோஷிமா நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று பல்வேறு அமைப்புகள் முடிவெடுத்தன. அமைப்புகளின் அழைப்பை ஏற்று ஆயிரக்க ணக்கான மக்கள் கண்டனப் பேரணியில் பங்கேற்றனர்.

“அமெரிக்கப் பயங்கரவாதிகளே நம்பர் 1 பயங்கரவாதிகள்”, “நேட்டோ கூட்டணியை நிறுத்து”, “போருக்கான தயாரிப்பில் இறங்காதே”, “ஜி–7 அமைப்பைக் குப்பையில் வீசு”, “ஜப்பான்–அமெரிக்கா இராணுவக்கூட்டணி வேண்டாம்” உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், இவற்றை முழக்கமிட்ட வாறும் மக்கள் ஹிரோஷிமா நகரில் வலம் வந்தனர். உச்சி மாநாடு நடக்கும் இடத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்ற இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் மாநாட்டு அரங்கிற்கு அருகில் உள்ள ஃபுனெரி டாலிச்சி பூங்காவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுமி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

**உக்ரைன் நெருக்கடி**

உக்ரைன் நெருக்கடி, உலகப் பொருளாதார நிலைமை மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய பிரச்சனைகள் பற்றி ஜி–7 உச்சிமாநாட்டில் விவாதித்திருக்கிறார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் முக்கிய பிரச்சனைகளில் முடிவுகள் எடுக்கப்படுவது சாத்தியமில்லை என்றே வல்லுநர்கள் கருதுகிறார்கள். உக்ரைன் நெருக்கடியில் ஜி–7 அமைப்புக்கு எந்தவிதமான பாத்திரமும் இல்லை என்பதே தற்போதைய நிலையாக உள்ளது. போர் தொடர்வதையே அமெரிக்கா போன்ற நாடுகள் விரும்புகின்றன.

**பயணம் இரத்து**

அவுஸ்திரேலியா மற்றும் பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளுக்கு செல்லவிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது பயணத்தை இரத்துச் செய்துவிட்டார். அமெரிக்காவின் கடன் நெருக்கடி அளவைத்தாண்டி சென்று விட்டதால், வரம்பை உயர்த்துவதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள குடியரசுக்கட்சியினர் ஒத்துழைக்கவில்லை. கடன் வரம்பை உயர்த்தாவிட்டால் பெரும் பிரச்சனை உருவாகும் என்பதால், ஜி–7 மாநாடு நிறைவு பெற்றவுடன் பைடன் அமெரிக்காவுக்கு திரும்புகிறார். உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடான அமெரிக்காவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 26.85 டிரில்லியன் டொலர் ஆகும். ஆனால், அந்நாட்டை 31.5 டிரில்லியன் டொலர் அளவுக்கு கடன் கழுத்தை நெரிக்கிறது.